Registered as a Newspaper in Ceylon

# ஈழநாடு

THE EELA NADU

தேசிய தினசரி National Tamil Daily

மலர் 8 (23 6-66) இதழ் 136

ராபவ ஆனி 9 ரபி அவ் 3 வியாழக்கிழமை

சுகர்ணோ

## 'விரும்பாவிடில் விலகுவேன்'

ஜாகர்த்தா, ஜூன் 22

'எனது ஆயுட்கால ஜனாதிபதி பதவியை மக்கள் ஆலோசனைசபை ரத்துச்செய்தால் அதில் எனக்கு ஆட்சேபனை இல்லை' என இந்தோனேஷிய அதிபர் டாக்டர் சுகர்ணோ மக்கள் ஆலோசனைச்சபைக் கூட்டத்தில் பேசிய போது தெரிவித்தார்.

'இச்சபைதான் என்னை ஆயுட்கால ஜனாதிபதியாகத் தெரிவுசெய்தது. இச்சபை விரும்பாவிட்டால் நான் அப்பதவியிலிருந்து விலகத்தயார்' என்றும் சுகர்ணோ கூறினார்.

## அசோகர் ஆணை

புதுதில்லி, ஜூன் 22

டில்லிக்கருகே, அசோகச் சக்கரவர்த்தியின் அரச ஆணை ஒன்றை கொந்தராத்துக்காரர் ஒருவர் கண்டெடுத்திருக்கிறார். இது 2200 ஆண்டுகளுக்கு முற்பட்டது. புத்தரின் பண்பாட்டை இந்த ஆணை பாராட்டுவதாகக் கூறப்படுகிறது.

## 'சிங்கம்' விடுவிக்கப்படும்

புதுடில்லி, ஜூன், 22

தற்போது காவலில் வைக்கப்பட்டிருக்கும் ஷேக் அப்துல்லாவை விடுதலை செய்ய இந்திய அரசாங்கம்ஆலோசித்து வருவதாய் பல வதந்திகள் அடிபட்டுவருகின்றன- 'ஷெர் காஷ்மீர்' அதாவது காஷ்மீர் சிங்கம் என அழைக்கப்படும் அப்துல்லா, தென்னிந்தியாவில் காவலில் வைக்கப்பட்டிருக்கிறார்

# விழாக் கோலம் பூணும் கல்முனை நகர்

## தமிழரசு மகாநாடு இன்று ஆரம்பம்

கல்முனை (தமிழரசு மகாநாடு), புதன்

இலங்கைத் தமிழரசுக்கட்சின் பத்தாவது தேசீய மகாநாடு நாளை வியாழக்கிழமை கல்முனையில் ஆரம்பமாகிறது. கட்சித்தலைவர்களும் பிரதிநிதிகளும் கல்முனைக்கு ஒருவர் இருவராக வந்து சேர்ந்துகொண்டிருககின்றனர். நாளை பிற்பகல் கட்சியின் செயற்குழு கூடும்பொழுது பிரதிநிதிகளும் தலைவர்களும் வந்து சேர்ந்து விடுவார்களென எதிர்பார்க்கப்படுகிறது.

தமிழரசுக்கட்சி மகாநாட்டின் இறுதிநாள் நிகழ்ச்சிகளில் இம்முறை முதல் தடவையாகப் பிரதமரும் கலந்துகொள்வதால் பிரதமரைப்பார்க்கவும் தமிழரசுத் தலைவர்களின் பேச்சைக் கேட்கவும், மகாநாட்டு நிகழ்ச்சிகளைப் பார்க்கவும் தமிழ் பேசும் மக்களும் சிங்கள மக்களும் இப்பொழுதே கல்முனையை வந்தடைந்து கொண்டிருக்கின்றனர்.

தமிழரசுக்கட்சித் தலைவர்களையும் பிரதமர் திரு. டட்லி சேனநாயகா, ராஜாங்க அமைச்சர் திரு. ஜே. ஆர். ஜயவர்த்தன ஆகியோரையும் மற்றும் பிரதிநிதிகளையும் வரவேற்பதற்காக கல்முனை நகரமே அலங்கரிக்கப்பட்டுவிழாக்கோலம் கொண்டுவருகிறது.

மகாநாட்டு வரவேற்புக் குழுத்தலைவர் ஜனாப் மசூர் மௌலானா மகாநாட்டுக்கான சகல ஒழுங்குகளையும் கவனித்து வருகிறார்.

## சைக்கிள், மோட்டார்கார் பவனி

மகாநாட்டின் இரண்டாம் நாளான 24-ந் திகதி காலை இரண்டாயிரம் சைக்கிள்களின் பவனியும் இறுதி நாளான 25-ந் திகதி மாலை 400 மோட்டார் கார்கள் பிரதமரைப் பவனியாக அழைத்துவர விருப்பதும் சிறப்பு அம்சங்களாக இருக்குமென எதிர்பார்க்கப்படுகிறது.

முதல்நாள் நடைபெறும் விஷயாலோசனைக் குழுக் கூட்டத்தில் அரசியல் மகாநாட்டில் சமர்ப்பிக்கப்பட வேண்டிய பிரேரணைகள் குறித்து விவாதிக்கப்படும்.

சமஷ்டி அமைப்பு வேண்டுமென்ற கோரிக்கையை வலியுறுத்தும் பிரேரணையொன்றும் விஷயாலோசனைக் குழுக்கூட்டத்தில் விவாதிக்

5-ம் பக்கம் பார்க்க)

## ஜே. ஆர். வரமாட்டார்

கொழும்பு, வியாழன்

கல்முனையில் நடைபெறவிருக்கும் தமிழரசுக் கட்சியின் வருடாந்த மகாநாட்டில் இராஜாங்க மந்திரி திரு.ஜே.ஆர்.ஜெயவர்த்தன கலந்து கொள்ளமாட்டார். இதை அவர் திரு. செல்வநாயகத்துக்கு எழுதியுள்ள கடிதம் ஒன்றில் தெரிவித்துள்ளார்.

## தமிழரசு மகாநாடு இன்று விஷயாலோசனைக் குழு கூடுகிறது

கல்முனை, வியாழன்

இலங்கைத் தமிழரசுக்கட்சியின் 10 வது மகாநாடு கல்முனை பாத்மா கல்லூரியில் வைத்தியகலாநிதி இ. மு. வி. நாகநாதன் தலைமையில் இன்று ஆரம்பமாகிறது. இன்றையதினம் விஷயாலோசனைக்குழு தமிழ் மக்களை எதிர்நோக்கியுள்ள பலதரப்பட்ட பிரச்சினைகள் பற்றி ஆராய்ந்து பொதுக் கூட்டத்தில் சமர்ப்பிப்பதற்கான பிரேரணைகளையும் இயற்றும்.

## இரத்மலானையில் சர்வோதய ஆசிரமம் அமைக்கப்படும்

### இந்துக் கல்விச்சபை காணியை வழங்கியுள்ளது

பம்பலப்பிட்டி, புதன்

கொழும்பில் சர்வோதய ஆசிரமம் ஒன்று அமைக்கப்படவிருக்கிறது. இதற்கான நிலம் இரத்மலானையில் தெரிவுசெய்யப்பட்டுள்ளது. இரத்மலானையில் உள்ள இக்காணியை இந்துக் கல்விச்சபை கொடுத்துதவியுள்ளது.

உலகில் உள்ள விமான நிலையங்களுக்கு அண்மையில் சர்வோதய ஆசிரமங்கள் நிறுவப்பட வேண்டுமென்ற விநோபாஜியின்விருப்பத்துக்கிணங்க கொழும்பிலும் அதுபோன்ற இடம்ஒன்றை தெரிந்தெடுக்கத்தாம் எடுத்துக்கொண்ட முயற்சிக்கு இந்துக்கல்விச்சபை கைகொடுத்துள்ளதையிட்டு காந்தி சேவா சங்கப்பிரமுகர்நன்று தெரிவித்தார்.

ஆசிரமத்தை இரத்மலானையில் அமைக்கவேண்டிய நடவடிக்கைகள் மிக விரைவில் மேறகொள்ளப்படவிருக்கின்றன. ஆசிரமஅமைப்பு வேலைகள் பெரும்பாலும் சிரமதான மூலமே செய்யப்படும். காணியைச் சுத்தம் செய்வதற்கானசிரமதானப்பணி அடுத்த மாதம் 2-ந் திகதி நடைபெறவிருப்பதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. சிரமதான பணியில் சர்வோதய சிரமதான இயக்கம், கொழும்பு இந்துக் கல்லூரி, விவேகானந்த வித்தியாலயம், கணபதி வித்தியாலயம், நுகேகொட தமிழ் மகா வித்தியாலயம், ஸ்ரீசண்முகானந்த கானசபா ஆகியவற்றிலிருந்து தொண்டர்கள் பங்குபற்றுவார்கள்.

## டெலிபோன் துண்டிப்பு

மூதூர், புதன்

மூதூரில் உள்ள தபாற் கந்தோரில் அடிக்கடி தந்தித் தொடர்புகள் துண்டிக்கப்பட்டுவிடுவதால் இங்குள்ள பொதுமக்கள் அவசர தேவைகளைக் கூட செய்ய முடியாது பெரிதும் கஷ்டமடைகிறார்கள். வாரத்தில் 5, 6 நாட்கள் இங்கு தந்தித்தொடர்புகள் துண்டிக்கப்பட்டுவருகின்றன.

## துரையப்பாவின் மனு நிராகரிக்கப்பட்டது

### கமிஷனர்களின்கீழ் நிர்வாகம் தொடர்ந்து இயங்கும்

கொழும்பு, புதன்

யாழ்ப்பாணம் மாநகரசபை விசேஷ கமிஷனர்கள் மூவரின் நியமனத்தை ரத்துச் செய்ய உத்தரவு பிறப்பிக்கும்படி யாழ்ப்பாணம் முன்னாள் மேயர் திரு. அல்பிரட் துரையப்பா தாக்கல்செய்த மனுவை சுப்பிரீம்கோட் நீதியரசர்கள் இன்று நிராகரித்தனர். இந்த மனுநீதியரசர்கள் டி. எஸ்.பெர்னாண்டோ, ஜி.பி. எவ். சில்வா ஆகியோர் முன்னிலையில் விசாரணைக்கெடுத்துக்கொள்ளப்பட்டது.

விசாரணையின்போது ஒரு சந்தர்ப்பத்தில் யாழ்ப்பாண மக்கள்தம்மைக் கவனித்துக் கொள்ளும் ஆற்றல் படைத்தவர்களென்றும் விசேஷ கமிஷனர்கள் நிர்வாகத்தைத் தவறான முறையில் நடத்தினால் யாழ்ப்பாண மக்கள் அவர்களை விரட்டியடித்துவிடுவார்களென்றும் நீதியரசர் திரு பெர்னாண்டோ எடுத்துக்கூறினார்.

மனுதாரரான திரு. அல்பிரட் துரையப்பா சார்பில் ஆஜரான திரு. ஐ. தியாகலிங்கம் கியூ. சி. யாழ். மாநகரசபை வேலைகள் விசேஷ கமிஷனர்களின் நிர்வாகத்தினால் சீரழிந்துவிடுமெனக் கூறியபோதே நீதியரசர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

இதுசம்பந்தமான மற்றொருமனு இருவாரங்களில் எடுத்துக்கொள்ளப்படுமென அறிவிக்கப்பட்டது

இந்த இரண்டாவது மனுவில் ஸ்தலஸ்தாபன மந்திரி தமது அதிகாரத்தை மீறி மாநகரசபையை அரசியல் நோக்கத்துடன் கலைத்தார் எனதெரிவிக்கப்பட்டுள்ளது

நீதியரசர் திரு. பெர்ணண்டோ, கலைக்கப்பட்ட கமிஷனர்கள் நிர்வாகத்தின் கீழ் நடைபெற்றுவரும் உள்ளூராட்சி மன்றங்களின் நிர்வாகம் மிகவும் திறமையாக நடைபெற்று வருவதாக பொதுவான கருத்து நிலவுவதாகவும் ஓரிடத்தில் சுட்டிக்காட்டினர்.

## காஞ்சிபுரம், மணிப்புரி சேலைகள் வேட்டை!

### நல்லூரில் நள்ளிரவில் கைப்பற்றப்பட்டன

யாழ்ப்பாணம், வியாழன்

நல்லூரில் உள்ள இரதினசிங்கம் என்பவரின் வீட்டிலிருந்து 3,500 ரூபா பெறுமதியான விலையுயர்ந்த காஞ்சிபுரம், மணிப்புரி சேலைகளும், சாரங்களும், சுங்க இலாகாவினால் நேற்று முன்தினம் நள்ளிரவில் கைப்பற்றப்பட்டன.

சுங்க இலாகாவினருக்கு கிடைத்த இரகசிய தகவலின் பேரில் சுங்க உதவி தடுப்பு உத்தியோகத்தர் திரு. வீரசிங்கம் தலைமையில் சென்ற கோஷ்டி, மேற்கண்ட பொருட்களை கைப்பற்றியது.

கைப்பற்றப்பட்ட பொருட்களை சுங்க இலாகா கலெக்டர் திரு. ஆர். லிஸ் முன்னிலையில் ஆஜர் செய்துள்ளனர். இது சம்பந்தமாக தொடர்ந்து விசாரணை நடைபெறுகிறது.

(நி.)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வரி விளம்பரம்

## விற்பனைக்கு

காணி

யாழ்ப்பாணம், இராசாவின் தோட்டம் வீதியில் புகையிரத நிலையத்திற்கு அண்மையில் மூன்றுபரப்புக் காணி விற்பனைக்குண்டு. விபரங்களுக்கு, விளம்பர இல. 587, ஈழநாடு மேற்பார்த்து, யாழ்ப்பாணம் என எழுத்துமூலம் விண்ணப்பிக்கவும். 587

நெற்காணி

நெற்காணி 6ஏக்கர்சரடிப் போக்குச் சந்தியிலிருந்து 3 மைல் தூரத்திலுள்ளது. கிளிநொச்சி 5-ம் வாய்க்கால் நீர்ப்பாய்ச்சல் உண்டு மோட்டார் வாகனத்தில் செல்லலாம். மேலும் விலை விபரம் அறிய விரும்புவோர் பரந்தன் M P C S,S. சுப்பிரமணியம் அவர்களிடம் கேட்டு அறிந்துகொள்ளலாம். 576

வெல்டிங் செற்

புதிய "குவாசி ஆக்"வெல்டிங் செற் AC. ARC. Type. ACP. 200 C. 20/200 Amps 230 /to 440 Volts அடங்கிய மேற்படி செற் ஒன்று விற்பனைக்குண்டு. விரும்பியோர் கீழ்க் குறிப்பிட்ட விலாசத்திற்கு நேரில்வந்துதொடர்பு கொள்ளவும். விலை விபரம் நேரில் பேசிக்கொள்ளலாம். தம்பு சுப்பிரமணியம், 6, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம், 588

இயந்திரம்

நெசவு செய்வதற்கு (Warp) பா ஓடுவதற்குத் தேவையான நம்பர் எண்ணக்கூடியஇயந்திரம்(Counting Machine) விற்பனைக்கு உண்டு. கிடைக்குமிடம்: M.போல், பா ஓடும் நிலையம், டாக்டர் சுப்பிரமணியம் வீதி, சுன்னாகம். (582)

## கல்வி

வகுப்புகள்:

எதிரே வரும் க. பொ. த. (சாதாரணம்) ஆவணி, மார்கழிப் பரீட்சைக்குத் தோன்றுபவர்களுக்கு கலை, விஞ்ஞானம் (லண்டன், இலங்கை, இந்தியப் பட்டதாரிகளாலும்) கணக்கியல், வர்த்தகம், பொருளாதாரம், பி. கொம் பட்டதாரிகளாலும், சுருக்கெழுத்து, தட்டச்சு 44 வருட அனுபவமுள்ளவராலும் விசேஷ வகுப்புகள் தமிழ்/ஆங்கிலம் இரு பாஷைகளிலும் நடைபெறுகின்றன. நேரில் பார்வையிட்டுச் சேர்ந்து படிக்கவும். வர்த்தகக் கல்லூரி ஸ்தாபிதம்: 1924. பருத்தித்துறை/வர்த்தகக்கல்லூரி ஸ்தாபிதம்: 1966. வதிரி சரவெட்டி. 580

## வைத்தியம்

தொய்வு, கசம், நீரிழிவு இரத்தி முதலிய பல கொடிய வியாதிகள் குணப்படுத்திய விபரங்கள் அடங்கிய கற்றலோக இனும். மந்திரிமார் மற்றும் பிரமுகர்கள் எம்மிடம் சிகிச்சை பெற்று வியந்துள்ளனர். வைத்தியர் பரிபூரணானந்தர், கைலாசபிள்ளையார் கோவிலடி, யாழ்ப்பாணம்.

# தலைவரை கொல்ல முயன்றான்!

சிட்னி, ஜூன் 22

ஆஸ்திரேலிய எதிர்க்கட்சித் தலைவரை கொலை செய்ய முயன்றதாக இளைஞன் ஒருவர் மீது குற்றஞ்சாட்டப்பட்டுள்ளது.

கூட்டம் ஒன்றில் கலந்துகொண்டுவிட்டு, அவர் தனது காரில் ஏறியவுடன் அந்த இளைஞன் துப்பாக்கியால் சுட்டான். எதிர்க்கட்சித் தலைவரின் முகத்தில் இதனால் காயம் ஏற்பட்டது. காரின் ஜன்னல் கண்ணாடிகள் நொருங்கின.


கிங்ஸ்லி (கொழும்பு) பிளாஸா (வெள்ளவத்தை) நவா (கும்பனித்தெரு)
வெலிங்டன் (யாழ்ப்பாணம்) விஜயா (அம்பாறை) ஸ்ரீகிருஷ்ண (திருக்கோணமலை)
விஜிதா (ஹட்டன்) கல்யாணி (நாவலப்பிட்டி) மொடேர்ன் (பதுளை)
தீவொளி (நுவரேலியா)



எம். ஜி. ஆர். - சரோஜாதேவி
நம்பியார், அசோகன், நாகேஷ்
பண்டரிபாய், சகஸ்ரநாமம்
மற்றும் பலர் நடித்த
சத்தியாமூவீஸ்
தெய்வத்தாய்


# மணிக்கு ஒரு லட்சம்

பெர்லின், ஜூன் 22

ஜெர்மன் ஜனநாயகக்குடியரசில் பிளாயுயென் தொழிற்சாலையில் 8 பக்கங்களைக்கொண்ட பத்திரிகை மணிக்கு ஒரு லட்சம் பிரதிகளை அச்சிடும் 'ஒப்செட்' இயந்திரங்களை உற்பத்தி செய்கிறது.

'நியூஸ் டெயுட்ஸ்லண்ட்' என்னும் ஜெர்மன் ஜனநாயகக் குடியரசின் பிரபல தினசரி உலகத்திலேயே ஒப்செட் இயந்திரத்தில் அச்சிடும் முதலாவது பத்திரிகையாகும். இந்த இயந்திரத்தின் பாரம் 220 தொன். நீளம் 55 அடி.

இங்கு உற்பத்திசெய்யப்பட்ட 430 தொன் பாரமும் 833 அடி நீளமுமுள்ள ஓர் இயந்திரத்தில் தான் சோவியத்நாட்டில் 'ஒகோனியோக்' என்னும் பத்திரிகை அச்சிடப்படுகிறது.

(ஏ டி என்)

ஒத்திவைப்பு

# காமராஜர் ரஷ்யவிஜயம்

புதுடில்லி ஜூன் 22

காங்கிரஸ் அங்கிராசனர் காமராஜர் தமது ரஷ்ய சுற்றுப்பிரயாணத்தை ஒத்திவைத்திருக்கிறார்.

இம்மாதம் 28-ந் திகதி அவர் மாஸ்கோவுக்குப்புறப்படவிருந்தார்.

ரஷ்யாவுக்கும் கிழக்கு ஐரோப்பிய நாடுகளுக்குப் தமது விஜயத்தை அவர்ஒரு மாதம் தள்ளிப்போடுவார்.

ரஷ்யாவுக்கு ஜூலைமாதம் 12-ந்திகதி செல்லும் பிரதமர் இந்திரா, நாடு திரும்பியபின்பேகாமராஜ்போகக்கூடும்.

ஸ்ரீமதிகாந்தி ரஷ்யாவில் 8 நாள் தங்கவேண்டுமென சோவியத்அரசாங்கம் விரும்பியதாயும், ஆனால் அலுவல் காரணமாக அவர் 4 நாள் மட்டுமே தங்குவார் என்றும் மாஸ்கோவில் முன்னாள் தூதரும், தற்போது வெளிஉறவு அமைச்சின் காரியதரிசியுமான திரு டி என் கவுல் அறிவித்தார்.

# யெகோவா சாட்சிகள் மகாநாடு

யாழ்ப்பாணம். புதன்

'யெகோவாவின் சாட்சிகள்' இயக்கத்தின் 'சர்க்கியூட்' மகாநாடு ஆனிமாதம் 23-ம் திகதி முதல் 25-ம் திகதிவரை யாழ்ப்பாணத்தில் நடைபெறவிருக்கின்றது. நாட்டின் பலபாகங்களிலுமிருந்து அங்கத்தவர்கள்இம்மகாநாட்டில் கலந்துகொள்வார்கள் என்று அறிவிக்கப்பட்டுள்ளது. 25-ம் திகதி மாலை நகரமண்டபத்தில் திரு. டி. ஆர். மத்தியூஸ் சொற்பொழிவொன்று நிகழ்த்துவார்.


ராஜா
(யாழ்ப்பாணம்)
தினசரி 2-30, 6 30, 9-30
போயா தினங்களில் 4 காட்சிகள்
ஜெமினி --- சாவித்திரி
நடித்த
மாதர்குல மாணிக்கம்

நியூ காலிங்கன்
(இணுவில்)
தினசரி 6-30, 9-30 மணி
விடுமுறை தினங்களில் 2-30 மணி
சிவாஜி - சாவித்திரி
நடித்த
நவராத்திரி

REGAL—JAFFNA
NOW SHOWING!
Russ Tamblyn - Maria Granada
in
SON OF A GUNFIGHTER
Cinemascope - Metrocolor


# சம்பந்தமில்லாதவை குறித்து அபிப்பிராயம் சொல்கிறார்களாம்

## சுப்ரீமகோர்ட் நீதியரசர்கள்பற்றி பிரதிநிதிகள்சபையில் விவாதம்

கொழும்பு, புதன்

இன்று சுப்ரீம்கோர்ட் நீதிபதிகளின் நடவடிக்கைகள் பற்றி பிரதிநிதிகள் சபையில் எதிர்க்கட்சியினர் பலத்த கண்டனம் தெரிவித்தனர்.

நீதிமந்திரி திரு. வன்னி நாயக்கா சுப்ரீம்கோர்ட் செலவுகளுக்கான ரூபா 75,108 உபமான்யப் பிரேரணை ஒன்றை சமர்ப்பித்தபோதே இந்தக் கண்டனங்கள் தெரிவிக்கப்பட்டன.

திரு. பீட்டர் கெனமன் பேசியபோது சுப்ரீம்கோர்ட் நீதிபதிகளுக்கு ஏன் கார்கள் கொடுக்கவேண்டும் என்று கேட்டார். பொதுமக்கள் சுப்ரீம்கோர்ட்டில் நம்பிக்கை இழந்துவிட்டார்கள். சில நீதியரசர்கள் தமது வழக்குகளுக்கு சம்பந்தமில்லாத விஷயங்கள் குறித்து கூட கோர்ட்டில் அபிப்பிராயங்கள் தெரிவிக்கிறார்கள். நீதிபதிகள் மத்தியில் அரசியல் செல்வாக்கு நிலவுகின்றது. உதாரணமாக நீதிபதி ஒருவர் சமீபத்தில் விலைக் கட்டுப்பாடு சம்பந்தமாக கருத்து வெளியிட்டதைச் சுட்டிக் காட்டலாம் என்று திரு. பீட்டர்கெனமன் கூறினார்.

திரு. தனபால வீரசேகரா பேசுகையில், நீதியரசர்களை அரசாங்கம் அரசியல் காரணங்களுக்கு பயன்படுத்துகிறது என்று குற்றஞ்சாட்டினார்.

திரு. சிவசிதம்பரம் இந்தக் குற்றச்சாட்டுகளை மறுத்துப் பேசியபோது, சுப்ரீம் கோர்ட் உலக மன்றங்களுடன் ஒப்பிடும் அளவுக்கு சிறந்து விளங்குவதாகவும், நீதியரசர்கள் நேர்மையாக நடக்கிறார்கள் என்றும் குறிப்பிட்டார்.

# தாலி திருடப்பட்டது

## எவரும் கைதாகவில்லை

யாழ்ப்பாணம், புதன்

நவாலி வடக்கைச் சேர்ந்த திருமதி சுப்பிரமணியம் (50) என்பவர் நேற்றிரவு அவரது வீட்டில் நித்திரை செய்துகொண்டிருக்கும் பொழுது இனந்தெரியாத நபர் ஒருவர் அவரது ரூபா 1500 பெறுமதியான தாலிக்கொடியைத் திருடிச்சென்றுவிட்டதாகஆனைக்கோட்டை பொலிசாருக்கு புகார் செய்ததைத் தொடர்ந்து பொலிஸ்நிலைய பொறுப்பாளர் திரு. கார்த்திகேசுவிசாரணை நடாத்தி வருகிறார். இதுசம்பந்தமாக எவரும் கைதுசெய்யப்படவில்லை.

ந. நி.

# கல்முனை மகாநாட்டிற்கு விசேஷ பஸ்

யாழ்ப்பாணம். வியா.

கல்முனையில் நடைபெறும் தமிழரசுக்கட்சி மகாநாட்டிற்கு இங்கிருந்து மட்டக்களப்பு ஊடாகவிசேட பஸ் சேவை இம்மாதம் 23, 24-ந் திகதிகளில் இ போ ச பகுதியினரால் ஒழுங்கு செய்யப்பட்டுள்ளது. இச்சேவை யாழ்ப்பாணம், ஊர்காவற்றுறை. பருத்தித்துறை முதலிய இடங்களிலிருந்து புறப்படும்.

# அயூப்புக்கு ஆட்சேபம்

டாக்கா, ஜூன் 22

டாக்காவில் இடேபாக் பத்திரிகையை மூடி, அதன் ஆசிரியரைக் கைதுசெய்தது குறித்து ஸூரிச்சிலுள்ள சர்வதேசபத்திரிகைக்கழகம் ஜனாதிபதி அயூப்புக்கு ஆட்சேபம் தெரிவித்திருக்கிறது.

# இ. போ. ச.வில் 5000 பேருக்கு வேலை

கொழும்பு, புதன்

இ. போ. ச.வில் 5000 பேருக்கு வேலைவாய்ப்பு வழங்குவதற்கான நடவடிக்கைகளை வருட முடிவுக்குள் மேற் கொள்ளப்போவதாக இ. போ. ச. உபதலைவர் மேஜர் ஒஸ்கார் டி லிவேரா தெரிவித்துள்ளார்.


மட்டக்களப்பு
பிரம்மஸ்ரீ ச. நாகராசா சர்மா அவர்கள்
கூறுகிறார்கள்:
இறைவன் திருமேனியை
சந்தனக் காப்பிட்டு
அலங்கரிக்கவும் பின் பிரசாதமாக
உபயோகிக்கவும் உகந்தது உடன்
அரைத்தெடுத்த சந்தனமாகும்.
அத்தகைய சுத்தமான
பச்சை சந்தனம்
யாழ்ப்பாணம் 73, மின்சாரநிலைய வீதியிலுள்ள
சுந்தரம் பிறதர்ஸ்
ஸ்தாபனத்தில்
எப்பொழுதும் வாங்கக்கூடியதாக ஒழுங்கு
செய்திருப்பது மிகவும் போற்றுதற்குரியதாகும்.


## The Engineering and Industrial Company Limited

The following Special Resolution was passed at an Extra-Ordinary General Meeting of the Company held on 16 th June, 1966:-

"It is hereby resolved that the Engineering and Industrial Company, Limited, be wound up voluntarily, that Messrs. K. Satchithananda and M. Pasupathy, Chartered Accountants, of 76, Hospital Road, Jaffna, be appointed Liquidators, jointly and severally, for such winding up, and that the remuneration of the Liquidators be fixed by mutal consent."

Shareholders who have not nctified to us of any change in their registered addresses should do so immediately.

376, Main Street, Jaffna.

C. C. Cumarasamy, Director / Secretary,

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

இந்தோனேஷியா

# மக்கள் ஆலோசனை சபைத் தலைவராக

# ஜெனரல் நசூதியான் தெரிவு

# சுகர்ட்டோவின் நிர்வாக அதிகாரம் அங்கீகரிக்கப் பட்டது

## அடுத்த இரு ஆண்டுகளில் பொதுத்தேர்தல் நடக்கும்

ஜாகர்த்தா, ஜூன் 22

இந்தோனேஷிய மக்கள் ஆலோசனைக் காங்கிரஸின் தலைவராக முன்னுள் பாதுகாப்பு மந்திரி ஜெனரல் நசூதியான் ஏகமனதாகத் தேர்ந்தெடுக்கப்பட்டிருக்கிருர். அதே சமயம் ஜெனரல் சுகர்ட்டோவுக்கு அதிபர் வழங்கிய நிர்வாக அதிகாரத்தை காங்கிரஸ ஆமோதித்திருக்கிறது.

ஆலோசனை காங்கிரசின் தலைவர் பதவிக்கு ஜெனரல் நசூதியானின் பெயரைத் தவிரவேறுளவருடையபெயரும் பிரேரிக்கப்படவில்லை.

மேற்கண்டமுடிவுகள் அடுத்த பொதுத்தேர்தல் வரை அமுலில் இருக்கும். இன்னும் இரண்டு வருடங்களில்பொதுத்தேர்தல்கள் நடைபெற இருக்கின்றன.

தமது தெரிவுக்குப் பின் ஜெனரல் நசூதியான் பேசுகையில் மலேஸியாவைநசுக்கும் இயக்கம் எதுவும் இப்போது இல்லையென்றும், எல்லையிலிருந்து படைகள் அப்புறப்படுத்தப்படும் என்றும் கூறிஞர்.

சீனு உள்ளிட்டு சகலநாடுகளுடனும் நட்புறவுடன் இருப்பதே இந்தோனேஷியாவின் கொள்கையெனக் கூறிய நசூதியான், ''ஆனல் சீனு தனது தற்போதைய போக்கைகைவிட்டால்தான் இது சாத்தியம்'' என்ருர்.

### நாஸருக்கு பாக். அழைப்பு

கெய்ரோ, ஜூன் 22

வருகிற அக்டோபர் மாதம் புதுடில்லி மண்டல சார்பற்ற மகாநாட்டில் கலந்து கொள்ளுமுகமாக ஜனுதிபதி நாஸர் இந்தியா வருகிருர். அவர் திரும்பும் வழியில் பாகிஸ்தானுக்கு வருமாறு அழைப்பு விடுக்கப் பட்டிருக்கிறது.

பி டி ஐ

### ஒலிம்பிக்குக்கு டெலிவிஷன்

மெக்ஸிகோஸிட்டி, ஜூன் 22

1968-ம் ஆண்டில் மெக்ஸிகோவில் நடைபெறவிருக்கும் ஒலிம்பிக் போட்டியை முன்னிட்டு, 30 லட்சம் பவுன் செலவில் டெலிவிஷன் அமைப்பு ஒன்றை மேற்கு ஜெர்மனி அங்கு நிறுவும்.

### வியட்னும் நிலைமை

லண்டன், ஜூன் 23

வியட்னும் பிரச்னையை ராணுவ அடிப்படையில் தீர்க்கமுடியாதென்றும், அரசியல் தீர்வு ஒன்றிஞல் மட்டுமே அதுமுடியும் என்றும் பிரிட்டிஷ் பிரதமர் திரு. வில்சன் பார்லிமெண்டில் கூறிஞர்.

தாம் அடுத்த மாதம் ஜனுதிபதி ஜோன்ஸனுடன் இது பற்றிப் பேசப்போவதாகவும் அவர் கூறிஞர்.

வியட்னும் பிரச்னை பற்றி கனடா, இதரநாடுகளுடன் தொடர்பு கொண்டுவருவதாக வெளிநாட்டு மந்திரி திரு. பால் மார்ட்டின் அறிவித்திருக்கிருர்.

வியட்னுமில் நேற்று அமெரிக்க விமானம் ஒன்றை வியட்காங்கியர் சுட்டுவீழ்த்தினர். மற்ருெர் அமெரிக்க விமானம் காணப்படவில்லை.

சைகோனுக்குவடகிழக்கே 69 வியட்காங்கியரை நேற்று கொன்றதாக அமெரிக்கர் கூறினர்.

உண்ணுவிரத மிருந்துவரும் பிக்கு திரிகுவாங்கை ராணுவத்தினர் பாதுகாவல் செய்துவருகிருர்கள்,

### ஐரோப்பாவின் அமெரிக்கப் படைகள்

வாஷிங்டன், ஜூன் 22

ஐரோப்பாவிலுள்ள அமெரிக்கப் படைகளை, குறைக்க மூடியாது என பாதுகாப்பு மந்திரி மக்னமாரா கூறிஞர் கிழக்கு நாடுகள் தங்கள் ஐரோப்பியப் படைகளைக் குறைத்தால்அமெரிக்கா அப்படிச் செய்யும் என்றும் அவர் கூறிஞர்.

### றொடீஷிய பேச்சு ஸ்தம்பிதம்

ஸாலிஸ்பரி, ஜூன் 22

நேற்று ஸாலிஸ்பரியில் பிரிட்டிஷ் - றொடீஷியபிரதிநிதிகளுக்கிடையே நடைபெற ருந்த பேச்சுக்கள் கடைசி நிமிடத்தில் கைவிடப்பட்டது பேச்சுக்களில் முட்டுக்கட்டை ஏற்பட்டிருப்பதாக வதந்திகள் உலவுகின்றன. இன்று மீண்டும் பேச்சு நடைபெறும் எனத் தெரிகிறது.

### வான்வெளிப் பேச்சுக்கள்

ஜெனிவா, ஜூன் 22

வானவெளியை சமாதான காரியங்களுக்கு உபயோகிப் ... அடுத்த மாதம் ஜெனிவாவில் ரஷ்

### உஜ்ஜல்சிங் தமிழ்நாட்டு கவர்னராவார்

புதுடில்லி, ஜூன் 22

இப்போது பஞ்சாப் கவர்னராக இருக்கும் உஜ்ஜல்சிங் சென்னை கவர்னர் ஆவார் எனத் தெரிகிறது.

பஞ்சாட்பில் அடுத்த வாரம் ராஷ்டிரபதி ஆட்சி பிரகடனம் செய்யப்படுவது நிச்சயமாகையால், தற்போது மந்திரி சபைக் காரியதரிசியாக இருக்கும் திரு. தர்மவீரர் அடுத்த வார மத்தியில் உஜ்ஜன் சிங்கிடமிருந்து பஞ்சாப் கவர்னர் பதவியை ஏற்பார்.

சென்னை கவர்னராக இருக்க உஜ்ஜன்சிங் ஒப்புக் கொண்டிருப்பதாய்த் தெரிகிறது.

தற்போதைய சென்னை கவர்னரான மைசூர் மகாராஜா ஸ்ரீ ஜெயசாமராஜ உடையார் சிகிச்சை பெறுவதற்காக வெளிநாடு சென்றிருக்கிருர். அவர் ராஜிஞமா செய்து விடுவார் எனக் கருதப்படுகிறது.

''ஹிந்தியை

### தேர்தல் பிரச்னையாக்கும் கட்சியை ஆதரியுங்கள்''

#### மாணவருக்கு அண்ணுதுரை

தஞ்சை, ஜூன் 22

நாட்டை ஒன்றுபடுத்தும் அம்சமாக ஹிந்தி இல்லாதது மட்டுமின்றி, அது ஆட்சி மொழியாகத் திணிக்கப்பட்டால் நாட்டைப் பிளவுபடுத்தும் சக்தியாக விளங்கக் கூடும் என திரு. ஸி. என். அண்ணுத்துரை கூறிஞர்.

தஞ்சையில் தமிழ் நாடு ஹிந்தி எதிர்ப்பு மாணவர் மகாநாட்டில் அவர் பேசிஞர்.

ஆட்சி மொழியாக ஆங்கிலம் நீடித்து வருவதுதான் பல்வேறு ராஜ்ய மக்களிடையே ஐக்கியத்தைப் பேணிவரும் என்றும் அவர் தெரிவித்தார்.

''முன்பு நடந்த ஹிந்தி எதிர்ப்புக் கிளர்ச்சியின் போது இப்பிரச்னையை பெரியவர்களிடம்விட்டுவிடுமாறு யோசனை கூறினேன். ஏனெனில் மாணவர்கள் கிளர்ச்சி செய்தாக வேண்டிய கல்வித்துறை பிரச்சனை அல்ல இது. இன்னும் இதே கருத்தைத்தான் கொண்டிருக்கிறேன், இது அரசியல் அளவில் கையாளப்பட வேண்டிய பிரச்னை'' என்ருர் அண்ணுத்துரை.

''ஹிந்தியை தேர்தல் பிரச்னையாக வைத்து போட்டியிடவிரும்பும் கட்சிகளின் கரங்களைப் பலப்படுத்த வேண்டும் என்பதே நான் கூறும் யோசனை'' என்றும் அண்ணுத்துரை கூறிஞர்.

பி டி ஐ

''மேற்கு நடுகளே!

### ரஷ்யாவுடன் நேரடி தொடர்பு கொள்ளுங்கள்''

#### மாஸ்கோ நகரமண்டபத்தில் பிரெஞ்சு அதிபர் வேண்டுகோள்

மாஸகோ, ஜூன் 22

பிரான்ஸ தற்போது ரஷ்யாவுடன் நேரடித் தொடர்பு கொண்டிருப்பதுபோல், மேற்கு ஜெர்மனியும். இதர மேற்கு ஐரோப்பிய நாடுகளும் ரஷ்யாவுடன் நேரடித் தொடர்புகொள்ள வேண்டுமென அதிபர் டிகால் இன்று வேண்டுகோள் விடுத்தார்.

இங்கு வந்திருக்கும் பிரெஞ்சு அதிபருக்கு மாஸ்கோ மக்கள் நேற்று மற்ருெர் பெரிய வரவேற்பளித்தனர் மாஸ்கோ நகரமண்டப உப்பரிகையிலிருந்து அவர் சொற்பொழிவாற்றிய போது ஆயிரக்கணக்கான மாஸ்கோ மக்கள் மகிழ்ச்சி ஆரவாரம் செய்தனர். இந்த உப்பரிகையிலிருந்துதான் லெனின் தனது மக்களுக்கு சொற்பொழிவாற்றுவது வழக்கம், நகரமண்டப உப்ரிகையில் தோன்றிய முதலாவது மேற்கு நாட்டுரா ஜதந்திரி டிகாலே ஆவர்.

ஜெனரல் டிகால் நேற்று ரஷ்யத் தலைவர்களுடன் கிழக்கு—மேற்கு உறவு, ஐரோப்பிய பாதுகாப்பு, ஜெர்மன் ஐக்கியம் ஆகிய விஷயங்கள் பற்றிப் பேசியதாயும், பேச்சுக்கள் நல்ல முறையில்சென்றன என்றும் அறிவிக்கப்படுகிறது.

இதற்கிடையில் ரஷ்யாவின் அழைப்புக்கிணங்க ஐ. நா. பொதுக்காரியதரிசி யுதாண்ட் மாஸ்கோ செல்லவிருக்கிருர். செப்டம்பர் மாதம் பொதுச்சபைக்கூட்டம் ஆரம்பிக்குமுன்பு அவர் ரஷ்யா செல்வார்.

கெடுபிடி நின்றபின்:

### மலேயாவிலுள்ள காமன்வெல்த் துருப்புகள் குறைக்க பேச்சு நடக்கும்

கோலாலம்பூர், ஜூன் 22

இந்தோனேஷிய கெடுபிடி உத்தியோக ரீதியில் வாபஸ் பெறப்பட்டபின், போர்ணியோவிலுள்ள பிரிட்டிஷ துருப்புகளைப் பிரதான பூமிக்கு வாபஸ்செய்யுமாறு மலேஸியா பிரிட்டனைக் கோருமென உதவிப் பிரதமர் துன் ரஸாக் பார்லிமெண்டில் தெரிவித்தார்.

பிரதான பூமிக்குத் துருப்புகள் நகர்த்தப்பட்ட பின் பிரிட்டன், ஆஸ்திரேலியா, நியூஸிலந்து ஆகிய நாடுகளுடன் மலேஸியாவிலுள்ள காமன்வெல்த் துருப்புகளை குறைப்பது குறித்து பேச்சு நடத்தப்படும் என்றும் ரஸாக் கூறிஞர்.

பிரிட்டனுடனுன பாதுகாப்பு உடன்படிக்கையின் கீழ் மலேயாவிலுள்ளகாமன்வெல்த் துருப்புகளின் பெரும்பகுதி பிரிட்டிஷ், ஆஸ்திரேலிய, நியூஸிலந்து நாடுகளைச் சேர்ந்தவையாகும்.

தற்காலிக வெளிநாட்டு மந்திரி துன் இஸ்மாயில் அப்துல் ரஹ்மான் பேசுகையில் தென்வியட்னுமில் அமெரிக்கத் தலையீட்டை மலேஸியா தொடர்ந்து ஆதரிக்கும் என்ருர். வியட்னும் கம்யூனிஸ்டுகளிடம் வீழ்ச்சியுற்ருல் அடுத்த இலக்கு தாய்லந்தும், மலேஸியாவுமே. எனவே தான் அங்கு அமெரிக்கத் தலையீட்டை ஆதரிக்கிருேம் என்ருர் அவர். (பி டி ஐ)

### சூ-இந்திரா கெய்ரோவில் சந்திக்க நாஸர் முயற்சி

கெய்ரோ, ஜூன் 22

அடுத்த மாதம் இந்தியப் பிரதமமந்திரி ஸ்ரீமதி இந்திராகாந்தி சீனப்பிரதமமந்திரிசூ-என்-லாய் ஆகிய இருவரையும் சந்தித்துப் பேசச் செய்ய ஐக்கிய அரபுக்குடியரசு அதிபர் நாஸர் முயன்றுகொண்டிருப்பதாக ராஜதந்திர வட்டாரங்களில் செய்திகள் அடிபடுகின்றன.

மாஸ்கோவில் பேச்சு நடத்திவிட்டுத் திரும்பும் வழியில் ஜூலை மூன்ரும் வாரம் ஸ்ரீமதி காந்தி கெய்ரோவுக்கு வர முன்பு திட்டமிடப்பட்டிருந்தது. ஆனல் இப்போது அவர் மாஸ்கோ செல்லுமுன் கெய்ரோ வர உத்தேசித்திருக்கிருர்.

சூ-என்-லாயும் அதேசமயம் கெய்ரோ வருவாரென எதிர்பார்க்கப்படுகிறது. பேச்சுக்குத் திகதி இன்னும் நிர்ணயிக்கப்படவில்லை.

சூ-என்-லாயின் நடமாட்டங்கள் இன்னும் ரகசியமாகவே இருக்கின்றன. ஆனல் அவருடைய வருகைக்கு அதிகாரிகள் ஏற்பாடு செய்துகொண்டிருப்பதாகத் தெரிகிறது.

முன்பு சூ-என்-லாயும், காலஞ்சென்ற லால்பகதூர் சாஸ்திரியும் சந்தித்துப்பேச நாஸர் முயற்சிசெய்தார். ஆனல் சாஸ்திரி இதை நிராகரித்துவிட்டார்.

யாவும் அமெரிக்காவும்பேசவிருக்கின்றன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மணி வாக்கு

பெரும்பான்மையினர் ஆளுவதுதான் ஜனநாயக மல்ல. எந்த ஒரு பெரும்பான்மை இனமும் சிறுபான்மை இனத்தின்மீது எதையும் திணிக்கக்கூடாது.

— எஸ். ஜே. வி.

ஈழநாடு

EELANADU National Tamil Daily. Post Box 49 JAFFNA.
Telegrams : EELANADU Jaffna. Telephone : 389

ஆனி மீ 9 (23-6-66)

## தமிழரசு மகாநாடு

இலங்கை வாழ் தமிழ் பேசும் மக்களின் முக்கிய அரசியல் கட்சிகளுள் ஒன்றான அகில இலங்கைத் தமிழ் அரசுக்கட்சியின் பத்தாவது தேசிய மகாநாடு இன்று கல்முனையில் ஆரம்பமாகிறது. மூன்று தினங்கள் நடைபெறும் இம்மகாநாட்டின் இறுதி நிகழ்ச்சியான பொதுக் கூட்டத்தில் இந்நாட்டின் பிரதமர் கலந்து கொண்டு உரை நிகழ்த்தவிருக்கிறார். இது தேசிய ஒற்றுமையை விரும்பும் அனைவருக்கும் நம்பிக்கையையும் மகிழ்ச்சியையும் அளிப்பதாகும்.

தமிழரசுக் கட்சி ஆரம்பிக்கப்பட்டதிலிருந்து ஆட்சி பீடத்திலுள்ள அரசாங்கங்களை எதிர்த்தே வந்துள்ளது. சென்ற ஒன்றேகால் வருடமாக அது அரசாங்கத்துடன் சேர்ந்து ஒத்துழைத்து வருகிறது. பதின்மூன்றே முக்கால் வருடங்கள் எதிர்ப்புத் தெரிவித்த தமிழரசுக் கட்சியும் ஒன்றேகால் வருடம் ஒத்துழைப்பு அளித்து வந்த தமிழரசுக் கட்சியும் சாதித்தது என்ன? இப்படியான கேள்விகளைச் சிலர் கேட்கின்றனர்.

இலங்கை வாழ் தமிழ் பேசும் மக்களிடையில் விழிப்புணர்ச்சியையும் அவர்களுக்குள் ஒற்றுமையையும் ஏற்படுத்தியதுடன் உரிமைக்காக போராடும் உணர்ச்சியை ஏற்படுத்தியது தமிழரசுக் கட்சி என்று கூறலாம். இன்று நாட்டில் மீண்டும் தேசிய ஒற்றுமையை ஏற்படுத்த எடுக்கப்பட்ட முயற்சிகளுக்கு ஆதரவளித்ததுடன் தமிழ் பேசும் மக்களின் உரிமைகளுக்காக அது தொடர்ந்தும் வாதாடிவருகிறது.

தனிமனிதர் வாழ்க்கையில் சில தவறுகளைச் செய்வது போலவே ஸ்தாபனங்களும் தவறு செய்வது இயல்பு. தமிழரசுக் கட்சி என்ற அரசியல் ஸ்தாபனமும் சில தவறுகள் செய்துதானிருக்கிறது. தவறை உணர்ந்து திருத்திக் கொள்வதுதான் பெருந்தன்மை. ஆண்டு மகாநாடுகள் முடிந்த ஆண்டில் செய்தவைகளை பரிசீலனை செய்து வரும் ஆண்டில் செய்யவேண்டியவைகளைத் தீர்மானிக்கும் சந்தர்ப்பமாகும்.

இதுவரை தமிழரசுக் கட்சி சாதித்தவைகளை விட இனிச் சாதிக்கவேண்டியவை பலவுள.

உருவாக்கப்பட்டுள்ள தேசிய ஒற்றுமையை நிலைபெறச் செய்யவேண்டியது தமிழரசுக் கட்சியின் முக்கிய கடமைகளில் ஒன்றாகும். தேசிய அரசாங்கத்துடன் ஒத்துழைப்பதன் மூலம் இழந்த உரிமைகள் சிலவற்றை குறுகிற காலத்துக்குள் பெற முடிந்தது. இனியும் இவ்வுரிமைகளும் கிடைக்கக் கூடும். ஆனாலும் அதிகார வர்க்கத்தினரதும் தமிழரசுக் கட்சியின் ஒத்துழைப்பின் மூலம் தமிழ் பேசும் மக்கள் உரிமைகளைப் பெறுவதைக் காண சகிக்காதவர்களும் சதி முயற்சிசெய்யக் கூடும்.

அரசாங்கத்துக்கும் தமிழரசுக் கட்சிக்கும் சிண்டு முடிந்து விடவும் சிலர் முனையக்கூடும். இவ்விஷயத்தில் தமிழரசுக் கட்சி விழிப்புடனிருக்க வேண்டியதுடன் நிதானமாகவும் நடந்து கொள்ள வேண்டும்.

தமிழரசுக் கட்சித் தலைவர்களின் நேர்மையும், தியாக சிந்தையும், மன உறுதியும், கட்டுப்பாடும் இன்று இலங்கையில் தமிழ் பேசுகின்ற ஓர் இனம் தன்மானத்துடன் வாழ்வதற்கு வழிவகுத்திருக்கிறது. தமிழ் பேசும் இனத்தின் மானத்தைக் காப்பதுடன் உரிமையுள்ள சமுதாயமாக உலகில் தலைநிமிர்ந்து நிற்கவும் தமிழரசுக் கட்சியினால் செய்ய முடியும்.

தமிழரசுக் கட்சித் தலைவர்களும் தொண்டர்களும் தங்கள் தியாகத்தினால் தமிழ் பேசும் மக்களின் மானத்தைக் காப்பாற்றினர். இதே போன்று தங்கள் தியாக சிந்தையையும் கடமை உணர்ச்சியையும் சமூகத்தின் நலனுக்கும் நாட்டின் நலனுக்கும் அர்ப்பணிக்க வேண்டும். தனிப்பட்ட எவர்மீதும் பகை கொள்ளாது, பகைவராயினும் அவரையும் மன்னித்து அனைத்து சமூகத்தினதும் நாட்டினதும் நலனுக்கும் முன்னேற்றத்துக்கும் தம்மை அர்ப்பணித்து வெற்றி பெறவேண்டும். தமிழரசுக் கட்சி மகாநாடு கட்சி நலனை மட்டுமன்றி நாட்டின் நலனையே பெரிதாகக் கருத வழிகாட்டுமாக.

## 'ஒற்றுமை வேண்டும்'

வேலணை, புதன்

'ஒன்றுபட்டாலுண்டு வாழ்வு ஒற்றுமை நீங்கிவிட்டால்அனைவருக்கும் தாழ்வு' வேலணை மேற்கில் தமிழரசுக்கட்சிக் கிளையை அங்குரார்ப்பணம் செய்துவைத்த தீவுப்பகுதி எம். பி. திரு. வி. நவரத்தினம் மேற்கண்டவாறு கூறினார்.

மேலும் அவர் பேசியபோது: எந்த ஒரு நாடானாலும் சரி, கிராமமானாலும் சரி, தம்முள் எவ்வித வேறுபாடுமின்றி ஒத்துழைத்தால்தான் அவர்கள் எவ்வித இடர்பாடுமின்றி ஒரு சுபீட்சமான நல்லவளமுள்ள வாழ்க்கையை அமைத்துக் கொள்ள முடியும். இவ்வாரம்ப விழாவிலே ஆர்வமுடன் கலந்துகொள்ளமுன் வந்ததன் மூலம் உங்கள் ஒற்றுமையையும் மன உறுதியையும் கண்டு மகிழ்ச்சியுடனும், பெருமையுடனும் இக்கிளையை ஆரம்பித்து வைக்கின்றேன் என்றார்,

பின்னர் கிளைக்குப் போஷகராக திரு. மு. இராமலிங்கமும் தலைவராக திரு. க.இ அரசகேசரியும் செயலாளராக திரு. வா. அருணகிரியும் தெரிவு செய்யப்பட்டனர். நாலுபேர் கொண்ட நிர்வாகசபையும் தெரிவு செய்யப்பட்டது.

# தமிழரசுக்கட்சி சாதித்தது என்ன?

— செனட்டர் எஸ. நடராசா —

அகில இலங்கைத் தமிழரசுக்கட்சியின் பத்தாவது தேசிய மகாநாடு இன்று கிழக்கு மாகாணத்திலுள்ள முக்கியநகரங்களில் ஒன்றான கல்முனையில் ஆரம்பமாகிறது. இலங்கை வாழ் தமிழ் பேசும் மக்களின் அன்பையும் ஆதரவையும் பெற்றுள்ள தமிழரசுக்கட்சியின் சரித்திரம் இலங்கைவாழ் தமிழ்பேசும் மக்களின் சரித்திரத்துடன் பின்னிப் பிணைந்ததாகும்.

1949-ம் ஆண்டில் தமிழரசுக்கட்சி உதயமானது.

வடக்கு மாகாணத்தவர், கிழக்கு மாகாணத்தவர், யாழ்ப்பாணத்தவர், மலைநாட்டவர், தமிழர், முஸ்லிம்கள் என்று மூலைக்கொன்றாக, இடத்துக்கொன்றாக தனித்தனியாக நின்று, உரிமைகளைப் படிப்படியாக இழந்துவந்த போதிலும், எதிர்த்துப்பேசவோ, தட்டிக்கேட்கவோ, ஒன்றுபட்ட சக்தியில்லாமல் தமிழ் பேசும் மக்கள் இருந்தனர். அச்சமயத்தில் தமிழரசுக் கட்சிதோன்றியது. இங்குள்ள தமிழர் ஒன்றுதல் கண்டு மனம் புழுங்கியசிலர் ஒற்றுமையைக் குலைக்க முயற்சி செய்தனர். இதன் பயனாக தமிழரசுக்கட்சியின் முதற் பொதுக்கூட்டத்திலேயே கல்லடியும் பொல்லடியும் பெற்றோம், ஆனால் நாம் கலங்கவில்லை; முன்வைத்தகாலைப் பின்வைக்கவுமில்லை.

தந்தை செல்வாவின் உள்ள உறுதியும் அமரர் வன்னியசிங்கத்தின் அஞ்சா நெஞ்சமும் தமிழரசுக் கட்சியை தமிழ் பேசும் மக்களுக்கு அர்ப்பணித்தன.

கட்சி வளர்ந்தது— இலங்கைவாழ் தமிழ் பேசும் மக்களின் விடுதலை இயக்கமாக அது வளர்ந்தது.

மலைநாட்டு மக்களும், கிழக்கு மாகாண மக்களும் வடக்குமாகாண மக்களும் மட்டுமல்லாது தென்னிலங்கையிலும் இலங்கைக்கு வெளியே சென்று குடியேறியுள்ள தமிழ் பேசும் மக்களும் இலங்கைவாழ் தமிழ் பேசும் மக்கள் உரிமையுடன் வாழ்வதற்கும் உலகில் தமிழ்பேசும் மக்களும் உரிமையுடன் வாழ்கிறார்களென்பதை உணர்த்தவும் இலங்கைத் தமிழரசுக்கட்சியையே எதிர்பார்க்கிறார்கள்; நம்பியிருக்கிறார்கள்.

இலங்கையின் சரித்திரத்தில் குறிப்பாக தமிழ் பேசும் மக்களின் சரித்திரத்தில் கடந்த இருபது ஆண்டுகள் சோதனையும் வேதனையும் நிறைந்தகாலமாகும். இக்காலத்துக்குள் தமிழ்ப் பேசும் மக்களை கருமேகங்களும் சூழ்ந்தன.

1956-ம் ஆண்டில் சிங்களம்மட்டும்சட்டம்கொண்டு வரப்பட்டதும் 1958-ம் ஆண்டில் வகுப்புக்கலவரம் ஏற்பட்டதும் 1961-ம் ஆண்டில் நடைபெற்ற சத்தியாக்கிரக இயக்கமும் இலங்கை வாழ் மக்கள் மறக்க முடியாத சம்பவங்கள்.

சென்ற பதினைந்து ஆண்டுகளில் இலங்கைத் தமிழரசுக் கட்சி எதைச்சாதித்தது என்று கேட்பவர்கள் இன்றும் உள்ளனர்.

இதற்கு ஒரே பதில், இன்று இலங்கையில் தமிழ் பேசும் இனம் அழிந்தொழியாமல் இருக்கிறதே அதே தமிழரசுக்கட்சியின் சாதனைதான், என்பதே.

தமிழரசுக்கட்சியின் சாதனைகளைப்பற்றி நான் கூறித்தான் மக்கள் தெரிந்து கொள்ளவேண்டுமென்பதில்லை. மக்களே நன்கறிவர். இது தவிர நானே நமது சாதனையை அளந்துவிடுவதும் முறையல்ல. செய்யாத காரியத்தைச் செய்தோம் என்று 'புளுகு'வதைவிட செய்ததைச் செய்ததாகக் கூறுவது தவறல்ல என்றாலும் நம்மைப்பற்றி நாமே கூறிக்கொள்வதற்கு தன்னடக்கம் விடவில்லை.

ஆனாலும் ஒரு விஷயத்தை சுருக்கமாகச் சொல்லவிரும்புகிறேன். அதைச்சொல்லித்தான் ஆகவேண்டும்.

இலங்கையின் சரித்திரத்திலும் இலங்கைவாழ்தமிழ் பேசும் மக்களின் சரித்திரத்திலும் உரிமைப்போராட்டம் என்பது நடைபெறவில்லை; தியாகம் என்ற வார்த்தை செயல்பட்டதுமில்லை. போராட்டத்தையும், தியாகத்தையும் செயலில் காட்டியது தமிழரசுக் கட்சி ஒன்றேதான். 'போராட்டம்' என்றும் 'தியாகம்' என்றும் அடிக்கடி பலர் பேசினாலும் செயலில் காட்டுவோர் குறைவு. தமிழரசுக்கட்சி இவற்றைச் செயலில் காட்டியிருக்கிறது.

போராட்டங்களை நடத்தி தியாகங்களைச் செய்த தமிழரசுக்கட்சி தனது இலட்சியங்களை நிறைவேற்றிவிட்டதா? இப்படிச் சிலர் கேட்கிறார்கள்.

இதற்கு 'ஆம்' என்று நாம் பதில் கூறவில்லை. தமிழ் பேசும் மக்கள் முழுக்க முழுக்க எமக்கு பூரண ஒத்துழைப்பும் ஆதரவும் அளித்திருந்தால் நிச்சயம் நமது இலட்சியங்கள் நிறைவேறியிருக்கும்.

ஆனாலும் தமிழ் பேசும் இனத்தை ஓரளவு காப்பாற்றியிருக்கிறோம்; இழந்த உரிமைகள் சிலவற்றைப் பெற்றுவருகிறோம், தொடர்ந்தும் நமது உரிமைகளைப் பெறுவதற்கு முயற்சிசெய்து வருகிறோம்.

பதின்மூன்றரை வருடங்களாகத் தமிழரசுக்கட்சி கொடுத்துவந்த எதிர்ப்பின் விளைவாக சென்ற ஒன்றரை வருடங்கள் தமிழரசுக் கட்சியின் ஒத்துழைப்புடனும் ஆதரவுடனும் அரசாங்கம் நடைபெற்று வருகிறது.

எங்கள் ஒத்துழைப்பையும் ஆதரவையும் கோரியவர்களுக்கு நாமும் நமது ஒத்துழைப்பையும் ஆதரவையும் அளித்திருக்கிறோம், நேசக்கரம் நீட்டியவர்களை நாம் உதறித்தள்ளவில்லை; அது பெருந்தன்மையுமல்ல.

ஒன்பது வருட கொடுங்கோலாட்சியில் நாம் இழந்தவைகள் அனைத்தையும் ஒன்றேகால் வருடங்களில் பெற்றுவிடமுடியது அது சுலபமுமல்ல. படிப்படியாகத்தான் பெறமுடியும். அவைகிடைத்துவிடும் என்ற நம்பிக்கையும் எமக்கு உண்டு.

எமது மகாநாட்டுக்குப் பிரதமர் டட்லி சேனநாயகாவும் ராஜாங்க மந்திரியும் வருவதே தமிழ் பேசும்மக்களின் ஒத்துழைப்பையும் ஆதரவையும் அவர்கள் பெரிதும் மதிக்கிறார்களென்பதையும் நாட்டின் முன்னேற்றத்துக்குத் தேசிய ஒற்றுமை அவசியமென்பதை அவர்கள் உணர்ந்து கொண்டனரென்பதையும் எடுத்துக்காட்டுகிறது.

தேசிய ஒற்றுமையையே நாமும் விரும்புகின்றோம். நாட்டின் முன்னேற்றமே நாம் விரும்புவது. ஆனால் தேசிய ஒற்றுமைக்காகவும் முன்னேற்றத்துக்காகவும் நாம் நமது மக்களின் உரிமைகளையும் தன்மானத்தையும் பணயம் வைக்கத் தயாராக இல்லை.

# ஐயாறன் எழுதுவது

வண்ணை சிவன்கோவில் முன்புறம் ஓர் அறிவித்தலைப் பார்த்தேன் இன்று ஸ்ரீ மாணிக்கவாசகர் குருபூசையென்றும், அது எப்படிச் சிறப்பாகக் கொண்டாடப்படுகிறதென்ற விவரங்களும் அதில் எழுதியிருந்தார்கள். அந்த அறிவித்தலைப் பார்க்காவிடில் இன்று இந்தப் பெருநாள் வருகிறதென்ற சமாச்சாரமே எனக்குத் தெரியாமல் போய்விடும். அவரைப்பற்றி நினைத்திருக்கவும் மாட்டேன். நம்மில் ஒவ்வொருவருக்கும் வேறு எவ்வளவு வேலைகள், கவலைகள். மாணிக்கவாசகசுவாமிகளைப்பற்றிய நினைப்பு எங்கே வரப்போகிறது

ஃ ஃ ஃ

அவரைப்பற்றி ஏன் நினைக்க வேண்டும்; இதெல்லாம் மூடநம்பிக்கையாகாதா என்று நமது ''பகுத்தறிவு'' நம்மைக் கேட்கிறது. பதில் சொல்லத்தானே வேண்டும்.

சைவத்துக்கு அன்று எவ்வளவோ சோதனை ஏற்பட்டிருந்தது. சைவர்களை மதம் மாற்றப் பல முயற்சிகள் செய்யப்பட்டன. ஈழத்திலிருந்து புத்தமன்னன் தன் ஊமைப் பெண்ணை சிதம்பரத்துக்கு அழைத்துச் சென்று, சைவர்களை சமயவாதத்துக்கு அழைத்தானும். சைவர்கள் சார்பாக மாணிக்கவாசக சுவாமிகள் வாதித்து வென்று, ஊமைப் பெண்ணையும் பேச வைத்ததாயும், பின்னர் அம்மன்னனும் சைவனாகிவிட்டதாயும் புராணம் கூறும். இன்று சமயம் இருக்கிறதென்றால் அதற்கு ஸ்ரீ மாணிக்கவாசக பெருந்தகை போன்ற சமய குரவர்கள் செய்த பெருந் தொண்டுதான் காரணமாகும்.

ஃ ஃ ஃ

அவர் சைவசமயத்துக்கு மட்டுமே உரியவரா என்ற கேள்வி எழுகின்றது. அப்படியாயின் அவரது தெய்வீகத் திருவாசகத்தை வேறு சமய போதகரும் வேறு மொழி பேசுபவருமான போப் என்பவர் மொழி பெயர்த்திருக்கமாட்டார். 'நாயிற்கடையாய்' மக்களாகிய நம்மில் பலரும் கிடக்கின்றோம். முத்திநெறியறியாத மூர்க்கர்களாக வாழ்கின்றோம். நமக்குப் 'பத்தி'நெறி அறிவித்து, நாமெல்லாம் தெய்வீகநிலை அடைய வழிகாட்டுகின்றார் நமது தெய்வீகத் திருவாசகத்தின்மூலம். அந்தத் திருவாசகம் சைவர்களுக்காக மட்டுமன்றி மக்கள் குலமனைத்துமே உய்யும் வண்ணம் பாடியது. அதன் பெருமையை அறிந்த போல் என்பவர் அதனை உலகமக்கள் அறிந்து நலம்பெற ஆங்கிலத்தில் மொழிபெயர்த்துத் தந்தார்.

தமிழரது பெரும் செல்வமாகும் இந்நூலை, சிங்களம் முதலிய மொழிகளிலும் மொழிபெயர்க்க வேண்டும். அப்படிச் செய்தால், தமிழரின் பெருமையையும், சைவத்தின் மாண்பினையும் சிங்கள மக்கள் உணரவும் அதனால் பயன் அடையவும் முடியும். ஆங்கிலத்தில் மொழிபெயர்க்கப்பட்ட அந்நூலை, சிங்களத்திலும் மற்ற உலக மொழிகளிலும் ஏன் மொழிபெயர்க்கக் கூடாது?

ஃ ஃ ஃ

மற்றவர்களைப் படிக்கச் செய்யு முன்பாக, தமிழரும்,

(5-ம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழ் பல்கலைக்கழகத்தை தாமதமின்றி நிறுவுக

## செயற்குழுவுக்கு தமிழரசு வாலிபமுன்னணி கோரிக்கை

— நமது நிருபர் —

கல்முனை, புதன்

தமிழ்ப் பல்கலைக் கழகம் ஒன்று திருகோணமலையில் விரைவாக அமைக்கப்பட வேண்டுமென்று தமிழரசுக் கட்சியின் வாலிப முன்னணி நாளை இங்கு ஆரம்பமாகும் தமிழரசு மகாநாடு செயற் குழுவுக்கு சமர்ப்பித்துள்ள தீர்மானமொன்றில் கேட்டுள்ளது.

அண்மையில் யாழ்ப்பாணத்தில் நடைபெற்ற தமிழரசு வாலிப முன்னணியின் கூட்டத்தில் மேற்கூறிய தீர்மானம் நிறைவேற்றப்பட்டது. வாலிப முன்னணியின் கூட்டத்தில் நிறைவேறிய தீர்மானங்கள் சில வருமாறு: இத்தீர்மானங்கள் நாளை இங்கு நடைபெறும் தமிழரசு செயற் கூட்டத்தில் விவாதிக்கப்பட்டு பின்னர் தமிழரசு மகாநாட்டுக்குச் சமர்ப்பிக்கப்படும்.

### பல்கலைக் கழகம்

தமிழ்ப் பல்கலைக் கழகம் ஒன்று நிறுவப்படவேண்டுமென்ற கோரிக்கை முற்றிலும் நியாயமானதே. இதற்குப் பொருத்தமான இடம் திருக்கோணமலைதான். தாமதம் எடுக்காமல் தமிழ்ப்பல்கலைக் கழகத்தை இங்கு நிறுவ நடவடிக்கை எடுக்கப்படவேண்டும்.

சகல அதிகாரங்களையும் கொண்ட இணையாட்சி சமஷ்டி அரசியலை நிறுவ நடவடிக்கை எடுக்கவேண்டும்.

### தமிழ்மொழி உபயோகம்

தமிழ்மொழி உபயோக (விசேஷ) சட்டவிதிகள் பார்லிமெண்டில் நிறைவேற்றப்பட்டு மாதங்கள் ஆறு இவ்விட்ட பொழுதிலும் இவ் விசேஷசட்டம் இன்னும் சரியாக அமுல் செய்யப்படவில்லை. இதனை நடைமுறைக்குக் கொண்டுவர ஆவன செய்வதுடன் தமிழ்மொழி உபயோகத்தைக்கவனிக்கும் பொருட்டு தனியானதிணைக்கழமொன்று அமைக்கப்பட வேண்டும்.

விவசாயத்தை ஊக்குவிப்பதற்காக அரசாங்கத்தால் காணிகள் கொடுக்கப்படும் ஆர்வமுள்ளவர்களை மிதலில் கருத்திற்கொண்டு வழங்கப்படுவதற்கானவகையில் திருத்தம் செய்யப்பட வேண்டும்.''

## நெருக்குதல்களுக்கு அரசாங்கம் பணியாது

### தொழில் மந்திரி அறிக்கை

கொழும்பு, செவ்வாய்

தோட்டத் தொழிலாளர்களின் குறைகளை சம்பளநிர்ணயசபையின்மூலம்தீர்த்துக் கொள்ளும்படி ஜனநாயக தொழிலாளர் காங்கிரஸிற்கு தொழில் மந்திரி திரு. எம். எச். முகமத் அறிவித்திருக்கிறார்.

தொழிலாளர்களின் குறைகளையும் கஷ்டங்களையும் நிவர்த்திசெய்துகொள்ளசம்பளநிர்ணயசபையைப்பயன்படுத்திக்கொள்ள வேண்டும் என்று அறிவித்துள்ள தொழில் மந்திரி, தேயிலை, றப்பர் தொழில்களை அத்தியாவசிய சேவைகளாக்கும்படி முதலாளிமார், அரசாங்கத்தை வற்புறுத்துவதாக ஒரு பத்திரிகையில் வெளிவந்த செய்தியை மந்திரி மறுத்திருக்கின்றார். முதலாளிகளாய் இருந்தாலும், தொழிலாளிகளாய் இருந்தாலும்நெருக்குதலுக்கு அரசாங்கம் பணிந்துகொடுக்காது என்று மந்திரி அறிவித்துள்ளார்.

வேலைநிறுத்தங்கள் சம்பந்தமாக முடிவெடுக்க தொழில் மந்திரிக்கு பூரண அதிகாரங்கள் பிரதம மந்திரியால் கொடுக்கப்பட்டிருப்பதாக இன்னொரு பத்திரிகையில் வெளிவந்த செய்திகளையும் தொழில் மந்திரி மறுத்துள்ளார்.

## ரிமாண்டிலிருந்து தப்பிய கைதி சைக்கிள் திருட்டில் சிக்கினர்

### சுன்னாகம் பொலிஸ் சாதனை

யாழ்ப்பாணம், புதன்

சுன்னாகப் பகுதியில் சமீபத்தில் திருட்டுப் போன சைக்கிள்கள் சம்பந்தமாக ஒருவரை சுன்னாகம் பொலிசார் இப்போது கைது செய்துள்ளனர்.

சின்னத்துரை நவரத்தினராஜா என்ற 17 வயது இளைஞரை நேற்று முன்தினம் சந்தேகத்தின் பேரில் சார்ஜண்ட் கிருஷ்ணராஜா விசாரித்ததின் விளைவாக அந்நபரிடம் சுமார் 12 சைக்கிள்களை பொலிசார் கைப்பற்றியுள்ளனர். இந்நபர் ஏற்கனவே ஆனைக்கோட்டையில் ஆடு திருடியதின் காரணமாக ரிமாண்டில் இருந்ததாகவும் பின்னர் தப்பி ஓடி தலைமறைவாக இருந்ததாகவும் தெரிகின்றது.

மல்லாகம் நீதிமன்றத்தில் சார்ஜண்ட் கிருஷ்ணபிள்ளை சந்தேக நபரை ஆஜர் செய்துள்ளார்.

இந்தச் சம்பவத்தைத் தொடர்ந்து சுன்னாகம் பொலிசார், சார்ஜண்ட் கிருஷ்ணபிள்ளை தலைமையில் நடத்திய புலன் விசாரணையின் காரணமாக மேலும் சில சைக்கிள் திருட்டுச் சம்பவங்கள் சம்பந்தமாக தில்லையம்பலம் சிவகுருநாதன், கதிரவேலு நாகரத்தினம் ஆகியவர்களும் கைது செய்யப்பட்டுள்ளனர். (ந. நி)

### வழக்கு ஒத்திவைப்பு

யாழ்ப்பாணம், புதன்

பலாத்கார முயற்சி வழக்கில், எதிரிதாம்சுற்றவாளியென்னத் தெரிவித்ததைத் தொடர்ந்து யாழ்ப்பாணம் மாஜிஸ்திரேட் திரு. ரி. ஜே ராஜரத்தினம் நேற்றுக்காலை விசாரணையை ஒத்திவைத்தார்.

இவ்வழக்கில் ஆனைக்கோட்டையைச் சேர்ந்த தங்கம்மா என்ற பெண்ணை செல்லையா சோமசுந்தரம் என்பவர், பலாத்காரம் செய்ய முயற்சித்ததாகக் குற்றம் சாட்டப்பட்டுள்ளது.

எதிரிசார்பில் புரக்டர் தளையசிங்கம் ... நாதன் ஆஜராஞர். நீதிபதி செப்டம்பர் 27-ம் திகதிவரை வழக்கை ஒத்தி வைத்தார்.

## பஸ் சாரதிகளுக்கு பயிற்சி

யாழ்ப்பாணம், வியா.

இலங்கைப் போக்குவரத்துச்சபையினுல் அண்மையில் நடத்தப்பட்ட பஸ்சாரதிகளுக்கான பரீட்சையில் தெரிவுசெய்யப்பட்ட 200 பேர்களில் எட்டுப்பேர்கள் பயிற்சி பெறுவதற்காக இன்று யாழ்ப்பாணம் வந்துள்ளனர். இவர்கள் யாழ்ப்பாணத்தில் சுமார் ஒருமாத காலம் பயிற்சி பெறுவார்கள்.

இந்த எட்டுப்பேர்களில் 7 பேர்கள் கிழக்குமாகாணத்தைச் சேர்ந்தவர்கள். ஒருவர் வடக்குமாகாணத்தைச் சேர்ந்தவர். சிங்களம் தெரியாத காரணத்தினுல் இவர்கள் பயிற்சி பெறுவதற்காக யாழ்ப்பாணத்துக்கு அனுப்பப்பட்டுள்ளார்களென அறியப்படுகிறது

## சைக்கிள் . . .

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

கப்படுமெனத் தெரிகிறது.

தமிழ்மொழிச்சட்ட விதிகளை அமுல் நடத்தும் பொறுப்பு தனி இலாகா ஒன்றிடம் ஒப்படைக்கப்பட வேண்டுமென்றும் இதன் தலைவராக ஒரு தமிழர் நியமிக்கப்படவேண்டுமெனவும் அரசாங்கத்தைக் கேட்டுக் கொள்வதற்கான பிரேரணை யொன்றும விவாதிக்கப்படுமெனத் தெரிகிறது

## ஐயாறன்

(4-ம் பக்கத்தொடர்ச்சி)

சைவர்களும் இதைப் 'பொருள் உணர்ந்து' செல்ல வேண்டும். அப்படிச் சொன்னுல் 'பல்லோரும் ஏத்தப் பணிய' பெருநிலை அடையலாமென்று உறுதி கூறுகின்ருர் மாணிக்கவாசகப் பெருந்தகை. பெருநிலை அடையக்கூடிய வழியை, நம்பெரியார்கள் இடித்து இடித்துக் கூறி, பாடிவைத்திருக்கையில் நம்மில் எவ்வளவு பேர் அவ்வழியைப் பின்பற்றுகிருேம்? நம் துன்பங்களுக்கு வேறுயார்மீதும் புகார் கூறலாமா?

ஃ ஃ ஃ

'திருவாசகம்' பற்றி பல பல நல்ல பதிப்புகள் வெளியாகின்றன. சிதம்பரம் அண்ணுமலைப் பல்கலைக்கழகத்தார் அருமையான பதிப்பைச் சமீபத்தில் வெளியிட்டுள்ளனர். பதம்பதமாகப் பிரித்து, சிறுவர்களுக்கும் எளிதில் விளங்கும் வண்ணம் அப்பதிப்பு இருக்கிறது. நம் சர்வகலாசாலைகளில் இம்மாதிரி நூல்களை ஏன்பாடப் புத்தகங்களாக வைக்கக்கூடாது? அண்ணுமலைப் பல்கலைக்கழகமே துணிச்சலுடன் முன்மாதிரி காட்ட முன்வரின் அங்கு படிக்கும் மாணவ மாணவிகளுக்கு அது எவ்வளவு பெரிய நன்மையாகும்!

ஃ ஃ ஃ

கடையவனேனைக் கருணையினுல் கலந்து ஆண்டு கொண்ட, விடையவனே விட்டாடுதிகண்டாய் விறல் வேங்கையின் தோல், உடையவனே மன்னுமுத்திர கோசமங்கைக்கரசே, சடையவனே தளர்ந்தேனெம்பிரான் என்னைத் தாங்கிக் கொள்ளே.

— ஸ்ரீ மாணிக்கவாசக சுவாமிகள்

## ஸ்தலஸ்தாபன மந்திரி திறமை மிக்கவர்

### பிரதிநிதிகள் சபையில் பிரேமதாஸ பாராட்டு

கொழும்பு, செவ்.

இன்று பிரதிநிதிகள் சபையில் ஸ்தலஸ்தாபன மந்திரி திரு. எம். திருச்செல்வத்துக்கு எதிராகத்தெரிவிக்கப்பட்ட பல கருத்துக்களுக்கு ஸ்தலஸ்தாபன அமைச்சின் பார்லிமெண்டரிக்காரியதரிசி திரு ஆர் பிரேமதாஸ தக்கமுறையில் பதிலளித்து விவாதித்தார்.

ஸ்தலஸ்தாபன அமைச்சுக்கான உபமான்யப்பிரேரணை மீது நடைபெற்றவிவாதத்தின்போது திரு பிரேமதாஸ பேசுகையில், எனக்கும் மந்திரிக்கும் கருத்து வேறுபாடு இருப்பதாக டாக்டர் பெரேராவும் வேறுபலரும் கூறுகிருர்கள் ஆனுல் அப்படியில்லை ஸ்தலஸ்தாபன மந்திரி மிகவும் திறமைசாலி அவரும்நானும் எல்லா விஷயங்களிலும் ஒத்துப் போகிருேம் என்ருர்.

### மட்டக்களப்பு இரத்தினபுரி

மட்டக்களப்பு, இரத்தினபுரி ஆகிய நகரசபைகள் விரைவில் கலைக்கப்பட்டு அவை மாநகர சபைகளாக அந்தஸ்து உயர்த்தப்படும் என்றும் ஸ்தலஸ்தாபன இலாகா முற்றாக மாற்றி அமைக்கப்படவிருக்கிறதென்றும் திரு பிரேமதாஸ கூறினுர்

டாக்டர் என். எம். பெரேரா, திரு. பீட்டர் கெனமன், திரு தனபால வீரசேகர, திரு ஆர் எஸ் எஸ் பெரேரா ஆகியவர்கள் பேசியபோது ஸ்தலஸ்தாபன மந்திரியை வன்மையாகக்கண்டித்தனர் திரு பீட்டர் கெனமன், ஸ்தலஸ்தாபன மந்திரி அரசியல் கட்சி ரீதியில் நடவடிக்கைகள் மேற்கொள்வதாகவும், கடமையில் தவறிவிட்டதாகவும் குற்றஞ்சாட்டினுர்.

## 'சிரமதான பொதுப்பணி செய்பவர்களுக்கே பயனளிக்கிறது'

யாழ்ப்பாணம், வியா.

அரசாங்கம் சுயதேவையைபூர்த்திசெய்யும் நோக்கமாகவே குடியேற்றத் திட்டங்களை உருவாக்கியுள்ளது. தேவிபுரம் பிரதான வீதித் திருத்த வேலைகளையும், நீங்களே செய்வதானுல், அதற்குரிய மதிப்பீட்டு நிதியை உங்களுக்கே சேரச்செய்ய நான் வாக்களிக்கிறேன்.

தேவிபுரம் அரசினர் பாடசாலையில் நடைபெற்ற கூட்டத்தில் யாழ்ப்பாணம் அரசாங்கஅதிபர் திரு. வேர்ணன் அபயசேகரா பேசும்போது மேற்கண்டவாறு கூறினுர்.

அவர் மேலும் கூறியதாவது: பரந்தன் புதுக்குடியிருப்பு முல்லைத்தீவு வீதியைச் சிரமதான முறையில் திருத்தியமைக்க வேண்டும் என்று எனக்குமுன் பேசியவர் கூறினுர். அதற்கென ஒரு விளக்க அறிக்கையை வெளியிட்டதையிட்டு மகிழ்ச்சியடைகிறேன். சிரமதானமூலம் நாங்கள் செய்யும் பொதுப்பணி எங்களுக்கே மீண்டும் பயனளிப்பதால், சிரமதானம் ஒரு சிறந்த முன்னேற்ற வழியென்று கூறுகிறேன். உங்களுக்குரியதண்ணீர்க்கஷ்டம், பிரயாணக் கஷ்டம் ஆகிய பல குறைகளை நீக்கிவைக்க நான் முயற்சிகள் செய்வேன்.

வவனியா எம். பி. திரு. ரி, சிவசிதம்பரம் பேசும்போது கூறியதாவது: 250 க்கு மேற்பட்ட குடும்பங்கள் குடியேற்றப்பட்ட இத்திட்டத்தில் மிகக் குறைந்த தொகையினராக இப்போது தங்கி, வசிக்கின்ற உங்களுக்குள்ள குறைபாடுகள் எவ்வளவு கடினமானவையாய் இருக்கும் என்பது எனக்குத் தெரியும். இக்குடியேற்றவாசிகளுக்கு இரண்டு ஏக்கராவது நெற்காணி கிடைக்கச் செய்வதுடன், தாபற்கந்தோர், பாடசாலை, வீதித் திருத்தம்போன்ற பலகுறைபாடுகளையும் நீக்கி வைக்க நான் ஆவனசெய்வேன்.

முல்லைத்தீவு காரியாதிகாரி திரு. க. தயாபரன், கிராமசபை அங்கத்தவர் திரு. அ. ப. கனகரத்தினம் ஆகியோர் சொற்பொழிவாற்றினுர்கள்.

## சூதாடியதாக வழக்கு

யாழ்ப்பாணம், வியா.

காங்கேசன்துறைவீதியிலுள்ள ஒரு கிளப்பில்சூதாடியதாக 32பேர்கள்மீதுகுற்றஞ்சாட்டித் தொடரப்பட்ட வழக்கு நேற்றுக் காலை யாழ்ப்பாணம் மாஜிஸ்டிரேட் திரு.ரி.ஜே.ராஜரத்தினம் முன்னிலையில் விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது.

எதிரிகள் 32பேரும் கோர்ட்டில் ஆஜராஞர்கள். எதிரிகள் சார்பில் வழக்கறிஞர்கள் ஜஸ். சி. கதிரவேலு, தளையசிங்கம் யோகநாதன் ஆர். விஸ்வநாதன் ஆகியோர் ஆஜராஞர்கள். மாஜிஸ்டிரேட் விசாரணையை செப்டம்பர் மாதம் 25ந் திகதி வரை ஒத்திவைத்தார்.

யாழ்ப்பாணத்திலுள்ள ஒரு கிளப்பில் சூதாடியதாக 4 பேர் மீது குற்றஞ்சாட்டித் தொடரப்பட்ட மற்ருெரு வழக்கை யாழ்ப்பாணம் மாஜிஸ்டிரேட் திரு ரி.ஜே.ராஜரத்தினம் செப்டம்பர்மாதம் 25ந் திகதி வரை ஒத்திவைத்தார்.

## தமிழரசு யாழ். கிளை கலைக்கப்பட்டது

யாழ்ப்பாணம், வியாழன்

யாழ்ப்பாணம் தமிழரசுக் கட்சிக் கிளை கலைக்கப்பட்டு புதிய உத்தியோகத்தர்கள் தெரிவு யாழ்ப்பாணக் கிளைக் காரியாலயத்தில் நேற்று நடைபெற்றது.

பீகிங், ஜூன், 22

புதிய ஆக்கிரமிப்புக்கு அமெரிக்கா திட்டமிட்டிருப்பதாயும், சோவியத்யூனியனுடன் சேர்ந்து சீனுவை நசுக்க அது சதி செய்துவருதாயும் பீகிங் குற்றஞ்சாட்டியுள்ளது.

## இடைத் தேர்தல்

யாழ்ப்பாணம், புதன்

கோப்பாய் கிராம சபை பத்தாம் வட்டார இடைத் தேர்தல் ஜூலை மாதம் ஆரும் திகதி நடைபெறும்.

ஃ ஃ ஃ

மிருசுவில் கிராம சபை ஆரும் வட்டார இடைத் தேர்தல் இம்மாதம் 27-ம் திகதி நடைபெறும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பணக்காரப் பெண்ணே! நான் சொல்வதைப் பணிவாகக்கேள் கண்ணே!

## மங்கையர் மன்றம்

கோப்பாய்
21-6-66

அன்புள்ள பணக்காரப்
பெண்ணுக்கு,

உன்னை நான் பஸ் நிலையத்தில் சந்தித்தேன். ஒரு கணம் என் கண்கள் உன் உருவத்தை எடை போட்டன. அடுத்த கணம் அவை இரகசியமாகக் கண்ணீர் வடித்தன.

கருமை தீட்டிய கண்கள்; சிவப்புச்சாயம் பூசிய உதடு குதி உயர்ந்த செருப்பு; குதித்தாடும் குதிரை வால் கொண்டை; இடையையும் முதுகையும் வெளிக்காட்டும் துவாரங்களுள்ள சட்டை; இவற்றுக்கு மேல் வெங்காயச் சருகுச்சேலை. இத்திஞாதி கோலங்களோடு நீ நின்ற தோற்றம். அப்பப்பா! இங்கே எழுதும் தரமும் அன்று; எடுத்துச் சொல்லும் தரமும் அன்று.

**ச. விக்னேஸ்வரன்**

பெண்ணே! அழகு செய்வதாகச் சொல்லிக்கொண்டு நீ செய்திருக்கும் இக்கோலங்கள் உன்னை, அலங்கோலப்படுத்துகின்றன என்பதை உணர்வாயா? அவை எங்கள் பண்பாட்டிற்கே மாருத அவமானத்தை உண்டாக்குகின்றன என்பதை அறிவாயா? இவை பற்றி நான் சொல்லத் தொடங்கினுல் உன்முகத்தில் எள்ளும், கொள்ளும் வெடிக்கும். அந்தக் காலத்துப் பெண்களைப் போல அங்கம்மறைய ஆடை உடுத்து, பின்னிப் பூச்சூடி, பிறைச் சந்திர நெற்றியிலே பொட்டிட்டுவந்தால் என்ன அழகாக இருக்கும் தெரியுமா? பார்த்தவர்கள், ஆகா! இவளன்றே தமிழ் பெண் என்று பாராட்டுவார்களே. இவ்வார்த்தைகளைக் கேட்டு என்மனம் குளிருமே!

உன் அலங்கோல அலங்காரத்தில்புகழக் கூடிய ஓர் அம்சமும் இருக்கிறது. அந்தக் காலத்துப் பெண்களைப் போல் ஏராளமான நகைகளை அடுக்காமல் ஒருசில நகைகளை மட்டும்தான் அணிந்திருக்கிருய். இதன் மூலம் எவ்வளவோ பணத்தை மிச்சப்படுத்தியிருக்கிருய். இதற்காக நான் உன்னைப் பாராட்டுகிறேன்

இவைகளோடு அச்சம், மடம் நாணம், பயிர்ப்பு என்றின்னேரன்ன அணிகளையும் அணிந்தால் எவ்வளவு சிறப்பாக இருக்கும். அதற்காக நீ ஆமைபோல் அடங்கி ஊமைபோல் நடுங்கிப்பெற்ருேர் கொண்டுவரும் மாப்பிள்ளையைப் பாராமல் மணந்து காலமெல்லாம் கண்ணீர் விடு என்று கூறவில்லை. உனக்குரிய வாழ்க்கைத் துணையை நீயே தேர்ந்தெடுத்துக் கொள்ள வேண்டும். அப்படித் தேர்ந்தெடுக்கும் காலத்தில் உன் உறவினர்கள்சாதிபொருந்தவில்லை; சாதகம் பொருந்தவில்லை என்று இடையில் குறுக்கிட்டு உன் உரிமையைப் பறிக்க முற்படுவர். அப்படி பறிக்க முற்படுவது அநாகரிகம் என்றே கருதுகிறேன். ஒரு பெண்ணுக்குத் தனக்குரிய வாழ்க்கைத் துணையைத் தானே தேர்ந்தெடுக்கும் உரிமை இல்லையென்ருல் அவளுக்குச் சமுதாயத்தில் வேறென்ன உரிமை இருக்கப்போகிறது? இதுபோன்ற விஷயங்களில் புரட்சிக் கவிஞர் பாரதிதாசன் உங்களினத்திற்குக் கூறிய சீர்திருத்தங்களை நான் மிகமிக வரவேற்கிறேன். அவற்றையெல்லாம் நீ நடைமுறையில் மேற்கொண்டு எங்கள் நாட்டுப் பெண்களுக்கு ஒரு முன்மாதிரியாக விளங்கவேண்டும்.

இன்னெரு விஷயம் கேள்விப்பட்டேன். உனக்குச் சமைக்கத் தெரியாதாம். வேலைக்காரிதான் சமைக்கிருளாம். அவள் சமைக்கிறதைச் சாப்பிடுகிறதோடு உன் வேலை சரியாம். ஐயையோ இதைவிட ஒரு பெண்ணுக்கு அவமானம் தரக்கூடிய விஷயம் வேறெதுவுமில்லை, இப்பொழுது இது உனக்கு விளையாட்டாகத் தோன்றினுலும் எதிர்காலத்தில் உன் குடும்ப வாழ்வில் இதுதான் வினையாக மாறும். ஒரு கணவனின் அன்பைப் பெறும் வழிகளிலே, உருசியாகச் சமைத்து அவன் விரும்பும் வகையில் ஒழுங்காகப் பரிமாறுவதும் ஒன்று. எனவே முதலில் நீ சமைக்கக் கற்றுக்கொள்.

இன்று நமது கிராமத்திலுள்ள எத்தனையோ ஆயிரக்கணக்கான ஏழைப்பெண்கள் சீதனக் கொடுமையால் காலாகாலத்தில் திருமணம் செய்யாமல் பெற்ருேரின் அடக்குமுறைக் கொடுமையால் படம், திருவிழா என்று பார்க்காமல், இல்லைக் கொடுமையால் ஒருவேளை உண்டு, அசோகவனத்துச் சிறைகளாக இருண்ட வாழ்க்கை நடத்துகிருர்கள். உனது நாய் வளர்ப்பு, உயர்ந்த புடவை வாங்குதல் போன்ற ஆடம்பர வழிகளில் செலவாகும் பணம் அவர்களுடைய நல்வாழ்வுக்குப் பயன்பட்டால் எவ்வளவு நன்ருக இருக்கும். எனவே நீயும் உன்னைப் போன்ற மற்றைய பணக்காரப் பெண்களும் இத்தகைய ஆடம்பர வழிகளில் பாழாக்கும் பணத்தை மிச்சப்படுத்தி அக் கிராமங்களிலே நெசவுநிலையம், தையல்நிலையம் போன்ற கைத்தொழில் நிலையங்களை உண்டாக்கி அப்பெண்களுக்கு வேலை கொடுக்க வேண்டும். அப்பொழுது அவர்களுடைய வாழ்வும் ஓரளவுக்கு வளம்பெறும். உங்களினமும் பூரணமாக முன்னேறும். நாட்டுக்கும் பொருளாதார நன்மை உண்டாகும். இன்றைக்கும் நீ எமது கிராமத்திற்கு வந்து பார்த்தால் இதுபோன்ற நிலையங்கள் எங்கள் கிராமப் பெண்களுக்கு வேலை கொடுத்து அவர்களுடைய வாழ்வில் ஒளியேற்றிவைப்பதைக் காணலாம்.

எனவே, நீ இதுபோன்ற புதுமைகளில் நல்லனவற்றை வரவேற்றுப் பழமைகளில் சிறந்தனவற்றைப் போற்றி உனது கணவனுக்கேற்ற இன்னுயிர்த் துணைவாகி மங்கலமங்கையாய், மாதர்குலமாணிக்கமாய் மாண்புற்று வாழ வேண்டும். இதுதான் எனது ஆசையம்மா. இதை நீ நிறைவேற்றி வைப்பாய் என நம்புகிறேன்!

இங்ஙனம்: உனது நல்வாழ்வில் அக்கறையுள்ள
'விக்கி'.

## எம்மை இவர்களால் புரியமுடியுமா?

வீடு என்னும்கோவிலில் பெண்தான் தெய்வம். ஆனல் கோவிலுக்குவந்து வெளியே விழுந்து விட்டால், அந்த தெய்வம் கல்லாகிவிடும்.

—காண்டேகர்

ஃ ஃ ஃ

அப்பாவியான ஒரு பெண் புத்திசாலி கணவனை ஆண்டுவிட முடியும். ஆனல் ஒரு முட்டாள் கணவனை ஆள ரொம்ப புத்திசாலியான பெண் வேண்டும்.

—கிப்ளிங்

ஃ ஃ ஃ

நேசிப்பதிலும் பழி வாங்குவதிலும் ஆண்களை விடப் பெண்களே அதிக காட்டுமிராண்டித்தனம் உள்ளவர்களாக இருக்கிருர்கள்.

—வில்ஹம்

ஃ ஃ ஃ

பெண் ஒரு மருந்து போன்றவள். கணவனின் உடலுக்கு அது ஏற்றதாக அமைந்து விட்டால் அதுவே சொர்க்கம். முரண்பட்டால் அதுவே நரகம்.

—எச். சி. சங்கர்.

ஃ ஃ ஃ

நாணலை போன்றவர்கள் பெண்கள். சிறு காற்று அடித்தாலும் வளைந்து கொடுப்பார்கள். ஆனல் புயல் அடித்தாலும் ஒடிய மாட்டார்கள்.

ஃ ஃ ஃ

குணசாலியான பெண் தன் கணவனுக்கு கிரீடமாக இருக்கிருள். ஆனல் இச்சையைஉண்டுபண்ணுகிற பெண்ணே, அவனுக்கு எலும்புருக்கி நோயாக இருக்கிருள்.

—பைபிள்.

## ஒரு சொற் கேளீர்!

நங்கையர் பணியை இன்று நாடு நாடி நிற்கிறது. மங்கையர் மன்றத்தில் உங்கள் கருத்துக்களைக் கட்டுரைகளாகவும் கவிதைகளாகவும் கடிதங்களாகவும் கருத்துக் குவியல்களாகவும் சுருக்கவிளக்கமாகத் தீட்டி அனுப்புங்கள். அனுப்பவேண்டிய முகவரி:

'மங்கையர் மன்றம்'
த. பெ. எண் 49,
ஈழநாடு,
யாழ்ப்பாணம்.

## மூவிணைக் காதல்

மூவிணைக்காதல் ஜோடிகளுக்கு இவ்வாரம் பிரிட்டன் யார்க்சயரிலிருக்கும் பான்ஸில் என்னுமிடத்திலுள்ள திருமணப்பதிவு அலுவலகத்தில் திருமணம் நடைபெறவிருக்கிறது. இம்மூன்று ஜோடிகளும் மூன்று சகோதரர்கள்களும் மூன்று சகோதரிகளுமாவர். இவர்களுள் விண்டர்பாக் என்ற சகோதரி ஹெரகல்டுஸ்மித் என்ற ஒரு சகோதரனை ஒரு நடனவிருந்தில் சந்தித்தாள். அவள் தனது சகோதரி எல்சியை ஹெரால்டின் சகோதரரான பிலிப்பிற்கு அறிமுகம் செய்து வைத்தாள். பின்னர் தனது அக்காள் மேரியை ஸ்மித் சகோதரரில் இளையவரான ராய்க்கு அறிமுகப்படுத்தினுள். அம்மூன்று ஜோடிகளும் தேன்நிலவுக்கு செல்லமாட்டாரிகள். அவர்கள் அனைவரும் சொந்தவீடு வாங்குவதற்காக முயற்சி செய்து வருகின்றனர்.

(நேபன்)

## கூந்தல் வளர...

கூந்தல் வளர்ச்சிபற்றி ராஜம் கூறும்சில கருத்துரைகள்:

நமது தலையில் வளரும் கூந்தலின் ஆயுள் ஐந்து அல்லது ஆறு ஆண்டுகள்தாம். ஆகையால் ஐந்து ஆண்டுகளுக்குப் பின் எப்போது வேண்டுமானுலும் பழைய கூந்தல் உதிர்ந்து கொண்டே போகும். புதிய கூந்தல் வளர்ந்து கொண்டே வரும். கூந்தல் என்பது உடலின் ஒரு பகுதி. கூந்தலின்வளர்ச்சிக்கு வேண்டிய உணவைச் சாப்பிட வேண்டும். கொழுப்புச் சத்து சற்றுஅதிகமாகச் சேர்த்துக் கொள்ள வேண்டும். வெண்ணெய், நெய், வேர்க்கடலை, முதலியவைகளை உணவில்சற்று அதிகமாகச் சேர்த்துக் கொள்ளுங்கள். இவைகளுடன் பருப்பு வகைகளையும் கோதுமை அரிசி இவைகளையும் உலோகச் சத்துள்ள காய்கறிகளையும், நிறைந்த அளவில் அடிக்கடி சேர்த்துக் கொள்ள வேண்டும். கீரை வகைகளையும், முள்ளங்கி, சிவப்பு முள்ளங்கி, பீட்ருட், இவைகளை உட்கொள்ளுவது நல்லது கண்ட மருந்துகளை நாம் வாங்கிச் சாப்பிடக்கூடாது. கடைகளில் விற்கும் கண்ட எண்ணெய் வகைகளை வாங்கித் தலையில் தடவக்கூடாது

## எது வாழ்வு?

— செல்வி க. கனகலிங்கம் —

கௌரி உனக்கு இந்த வரன்பிடித்துக்கொண்டதா? பெயர் வரன் உத்தியோகம் டாக்டராம் இப்பதான் அப்பா விபரமெல்லாவற்றையும் எனக்குக் கூறினர். நீ என்ருலும் அதிர்ஷ்டக்காரிதான் இல்லையென்ருல் பி. எஸ். ஸிக்கு ஏற்ற டாக்டர் சோடி கிடைக்குமா? என்று கூறித் துள்ளிக்குதித்தாள் பங்கஜம். அம்மா கண்டிப்பாகச் சொல்கிறேன் எனக்கு இந்த வரன் பிடிக்கவேயில்லை. நான் கடைசி வரை செய்யப் போவது இல்லைஎன்றுகூறினுள்கௌரி ஏனடி கத்துகுருய், உனக்கேற்ற அந்தஸ்து இல்லையா? அழகில்லையா, பணமில்லையா பின்னை ஏனடி வேண்டாமென்கிருய் என்று பொருமினுள் பங்கஜம். 'அம்மா பிறக்கும்போது எல்லோரும் செக்புத்தகத்துடனு பிறக்கிருர்கள். அந்தஸ்து, கௌரவம் எல்லாம் மனிதன் தன்னுலேயே தேடியதுதானே, பட்டிதாரிகளெல்லாம் இஞ்ஜினியர், டாக்டரைத்தானு மணமுடிக்க வேண்டும், பண்புள்ள ஓர் ஏழை விவசாயி ஏன் ஒரு பெண்ணுக்குச் சிறந்த வாழ் வழிக்கமாட்டான்? அது எமது அந்தஸ்த்துக்கு ஒவ்வாது. அப்படிச் செய்வதாயிருந்தால் குப்பையிலுள்ள குண்டு மணியைத் தூக்கி மெத்தையிலே வைத்தது மாதிரியிருக்கும்' என்ருள் பங்கஜம். அம்மா குண்டு மணி குப்பையில் கிடந்தாலும் மங்காது. சேற்றில் தான் செந்தாமரை வளரும். சிப்பியில்தான் முத்து வளரும்' என்று வாதம் பேசினுள் கௌரி. அப்ப நீ அந்த ஏழை விவசாயி கனகுவைத்தான் மணம் செய்யப்போறியா? உன் அந்தஸ்துக்கு அவன் ஏற்றவனு? உன்தோழியர் ஆங்கிலத்தில் பேசுவதை புரியாது திகைப்பதைப் பார்த்து உன்தோழியர் ஏளனம் செய்யமாட்டார்களா? படித்துப் பட்டப் பெற்ற நீ அந்த விவசாயியை மணந்து இன்பம் காண்பாய் என்று நினைக்கின்ருயா? அப்படி நீ நினைத்தால் அதற்கு நீ பின் வருந்துவாய். இதை நீ போகப் போக உணர்வாய். அம்மா நீங்களும் இருந்து பாருங்கோ நான் வாழ்வில் இன்பம் காண்பேனு இல்லையாவென்று. நான் மனப்பூர்வமாகவே கனகுவை மணந்து இன்பம்காண்பேன்.

நாட்கள் வாரங்களாகவும் வாரங்கள் மாதங்களாகவும் மாதங்கள் வருடங்களாகவும் காலச் சக்கரம் உருண்டோடிக்கொண்டிருந்தது. அதற்கிடையில் எத்தனையோ மாற்றங்கள் இடம் பெற்றன. கௌரியின் திருமணம் பெற்ருேரின் எதிர்ப்புக்கிடையே நடந்தேறியது. கௌரி—கனகுவின் வாழ்க்கைப்படகு உலக ஆற்றிலே சலனமின்றி ஓடிக்கொண்டிருந்தது கௌரிக்கு முன்பு ஏற்பாடு செய்த டாக்டர் கணேசுவை கௌரியின் தோழி மீனு கணவனுக ஏற்றுக்கொண்டாள். அவர்களின் வாழ்க்கை....?

''அம்மா அம்மா எழும்பம்மா மீனுவீட்டு வாசலிலே வாடகைக் கார் ஒன்று நிற்குது ஆட்களும் அனேகம் பேர் நிக்கினம் என்று தூக்கத்திலுள்ள பங்கஜத்தைத் தட்டி யெழுப்பினுள் கௌரி, ஓட்டமும் நடையுமாக விரைந்தனர் மீனுவீட்டிற்கு. அங்கு டாக்டர் கணேசுவை மீனு மடியில் வைத்திருந்தாள். கணேசு தலையில் பலத்த கட்டு போட்டிருந்தது. 'ருவிஸ்ற் நடனம் ஆடேக்கை ஐயா கதிரைமேலே விழுந்திட்டுது அதுதான் நல்ல கட்டு' என்று விஷயத்தை விளக்கினுள் சார்ச்சாரதி. மீனுவின் அம்மா சர்திரா பரம்பரை பரம்பரையாக கௌரவமாக வாழ்ந்த எங்கள் குடும்பத்தை தெருச் சிரிக்க வைத்து விட்டானே இவன். டாக்டராம் டாக்

(8-ம்பக்கம் பார்க்க)

## அதிசய வழக்கங்கள்

இப்புவியை ஆண்ட அரசிகளுக்கு விநோத பழக்கங்கள் பல இருந்துள்ளன. இங்கிலாந்தின் முதலாவது எலிசபெத் மகாராணிக்கு விதம்விதமான ஆடைகள் என்ருல் மிகவும் பிடிக்குமாம். இங்கிலாந்தை நாற்பத்தைந்து வருடகாலம் ஆண்ட இவ்வரசியிடம் 2,000க்குமே பட்டபலவித ஆடைகள் இருந்தன. அவர் ஒவ்வொரு நாளும் ஒவ்வொரு விதமான ஆடை அணிவாராம்.

ஃ ஃ ஃ

எட்டாவது ஹென்றி மன்னரின் இரண்டாவது மனைவியான ஆன் பொலீன் கையில் எப்பொழுதும் 'கிளவ்ஸ்' (கையுறை) அணிந்திருந்தாராம். அது அவர் கையிலிருந்த ஆறு விரல்களை மறைக்க!

ஃ ஃ ஃ

ரஷ்ய அரசி கதரீன் இளைப்பாற விரும்பினுல் அவரிடம் ஒரு விசித்திர பழக்கமிருந்தது. சேவகி ஒருத்தியை அழைத்து தன்னுடைய கால் பாதங்களுக்கு கூச்சமூட்டச் சொல்வாராம் காலை ஆகாரத்தின்போது இவர் தினசரி ஐந்து பெரிய கோப்பைகள் நிறைய கோப்பி அருந்துவாராம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கடிதங்களுக்கு பதில் இல்லை

### பண்டிதர் இரத்தினம் புகார்

கொழும்பு, புதன்

மத்திய வங்கி ஆளுனருக்கு திரு. கா. பொ. இரத்தினம் எம். பி. எழுதியுள்ள ஒரு கடிதத்தில் தமது பல கடிதங்களுக்கும் பதில் அனுப்பப்படவில்லையென்று குற்றஞ்சாட்டியுள்ளார்.

மத்தியவங்கியில் தமிழ் ஆண்டறிக்கையோ, தமிழ் மாதாந்த செய்தித் திரட்டோ வெளியிடப்படவில்லையென்றும் குற்றஞ் சாட்டியுள்ளார்.

அரசாங்க அலுவலகங்களுக்கு தமிழ் மக்கள் தமிழில் கடிதம் எழுதலாம் என்றும், இலாகாக்களில் இருந்து தமிழ் மக்களுக்கு அனுப்பப்படும் கடிதங்கள் தமிழில் சிங்களப் பிரதியுடன் அனுப்பப்படவேண்டும் என்றும் ராஜாங்க மந்திரி 8-1-66ல் பிரதிநிதிகள் சபையில் தெரிவித்த கருத்தையும் பண்டிதர் இரத்தினம் சுட்டிக் காட்டியுள்ளார்.

தமிழ் மக்களுக்கு அனுப்பப்படும் கடிதங்களைத் தமிழில் அனுப்பும்படியும் மத்திய வங்கியின் தமிழ் வெளியீடுகளை வெளியிடும்படியும் அவர் தமது கடிதத்தில் வற்புறுத்தியுள்ளார்.

## புதிய பொலிஸ் நிலையம்

அகலவத்தை, புதன்

அகலவத்தை தொகுதியிலுள்ள கறப்பகல என்னுமிடத்தில் ஒரு பொலிஸ்நிலையத்தைத் திறப்பதற்கு நீதியமைச்சும், பொலிஸ்பகுதியும் முடிவுசெய்துள்ளது.

குற்றங்களும், களவுகளும் அதிகரித்ததன் காரணமாகவே இந்த பொலிஸ் நிலையத்தை அரசாங்கம் திறக்க உத்தேசித்துள்ளது.

## புதுவருட நிர்வாகிகள்

யாழ்ப்பாணம், வியாழன்

அண்மையில் நடைபெற்ற திருநெல்வேலி இந்து வாலிபர் சங்கத்தின் ஆண்டுப் பொதுக்கூட்டத்தில் பின்வருவோர் புதுவருட நிர்வாகிகளாகத் தெரிவு செய்யப்பட்டனர். தலைவர் என் சிவசிதம்பரம், உபதலைவர்கள்-கே செல்வரத்தினம், வி கணபதிப்பிள்ளை, கலாநிதி வி கே சண்முகநாதன், பொதுச்செயலாளர்-பொ. திருநாவுக்கரசு, உதவிபொதுச் செயலாளர்-க பாலகுமார், தனதிகாரி-பொ யோகசுந்தரம். 23 பேர் கொண்ட நிர்வாக சபை ஒன்றும் தெரிவுசெய்யப்பட்டது.

## ஐ.அ.பொதுச் சேவைத் தொழிலாளர் சங்கம்

யாழ்ப்பாணம். வியாழன்

அரசியற் காரணங்களுக்காக அரசாங்க பொதுச் சேவைத் தொழிலாளர் சங்கத்திலிருந்து வெளியேறிய அங்கத்தவர்கள், ஜனநாயக அரசாங்க பொதுச் சேவைத் தொழிலாளர் சங்கம் என்னும் பெயருடன் யாழ்.செயலகத்தில் திரு. கே செல்லத்துரை தலைமையின்கீழ் நடைபெற்ற கூட்டத்தில் அங்குராப்பணம்செய்தனர்.

நடப்பு வருட உத்தியோகஸ்தர்களாக பின்வருவோர் தெரிவுசெய்யப்பட்டனர்:-

தலைவர்: திரு. ஈ. கே, குமரையா, உபதலைவர்கள் திருவாளர்கள்: என். முருகேசு, ஏ. எம். திருமேனிப்பிள்ளை, எஸ். யோசப்பு. பொதுக் காரியதரிசி: திரு. கே. செல்லத்துரை, உபபொதுக்காரியதரிசி: திரு. ஏ எஸ். அரியநாயகம். தனதிகாரி திரு. கே. சண்முகலிங்கம்.

ஒரு நிர்வாக சபையும் தெரிவுசெய்யப்பட்டது.

## வருடாந்த உற்சவம்

யாழ்ப்பாணம், புதன்

கந்தர்மடம் சித்திவிநாயகர் வெள்ளி இரதத்தில் அலங்காரசகிதமாக, பலாலி வீதி வழியாக வந்தபோது, ஏராளமான மக்கள் பூரண கும்பங்கள் வைத்து தரிசித்தனர், வருடாந்தஉற்சவம், தீர்த்த திருவிழாவுடன் முடிவடைந்தது,

## வருடாந்தக் கூட்டம்

யாழ்ப்பாணம், வியா.

அகில இலங்கை அரசினர் பாடசாலைத் தமிழர் ஆசிரியர்சங்க யாழ் கிளையின் வருடாந்தப் பொதுக்கூட்டம் இம்மாதம் 24-ந் திகதிவெள்ளிக்கிழமை காலை 10 மணிக்கு யாழ் வண்ணை வைத்தீஸ்வரவித்தியாலயத்தில் நடைபெறும்.

## மணிவாசகர் குருபூசை

யாழ்ப்பாணம், வியாழன்

கொட்டடி இந்து சமய விருத்திச் சங்க சார்பில் மாணிக்கவாசகசுவாமி குருபூசை வில்லூன்றி விநாயகர் ஆலயத்தில் இன்று வியாழக்கிழமை காலை பத்துமணிக்கு நடைபெறும். திருவாசகம், சிவபுராண பாராயணமும் நடைபெறும். அதையடுத்து மகேசுரபூசையும் இடம்பெறும்.

## 17 நாடுகள் சுற்றுலா

பம்பாய், ஜூன் 22

17 ஐரோப்பிய நாடுகளில் சுற்றுப்பிரயாணம் ஒன்றை இந்திய நிதி மந்திரி திரு. சௌத்ரி இன்று பம்பாயிலிருந்து ஆரம்பித்தார்.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# லாட்ஸ்டெஸ்ட் வெற்றிதோல்வியின்றி முடிவு

## ஸோபர்ஸ் 163; ஹால்போர்ட் 105

## புதிய (லாட்ஸ்) சாதனை!

### மேற்கிந்தியா: 5–369; இங்கிலாந்து: 4-197

—"அவதானி"—

லாட்ஸ், ஜூன் 21

இங்கிலாந்துக்கும் மேற்கிந்தியாவுக்குமிடையே லாட்ஸில் நடைபெற்ற இரண்டாவது கிரிக்கெட் டெஸட் நான் நேற்றுக் குறிப்பிட்டிருந்தது போலவே இன்று வெற்றி தோல்வியின்றி முடிவடைந்தது.

இக்கிரிக்கெட் டெஸ்டின் முதல் இனிங்ஸில் இங்கிலாந்து அதிகப்படியான ஓட்டங்களை எடுத்து மேற்கிந்திய கோஷ்டியின் இரண்டாவது இனிங்ஸில் மளமளவென்று ஐந்து விக்கட்டுகளை 95 ஓட்டங்களுக்குள் வீழ்த்தியதும் நிலைமை இங்கிலாந்துக்குச் சாதகமாகுமென்றே எதிர் பார்க்கப்பட்டது. ஆனல் ஸோபர்ஸினதும் ஹால்போர்ட்டினதும் அற்புதமான விளையாட்டு மேற்கிந்திய கோஷ்டிக்குப் புத்துயிர் அளித்து விட்டது.

**ஸ்கோர்விபரம்**

மேற்கிந்திய கிரிக்கெட் கோஷ்டி தனது முதல் இனிங்ஸில் மொத்தம் 269 ஓட்டங்கள் எடுத்தது. இங்கிலாந்து தனது முதல் இனிங்ஸில் 355 ஓட்டங்கள் எடுத்தது. இன்று மேற்கிந்தியா தனது இரண்டாவது இனிங்ஸில் 5 விக்கட்டுகள் நஷ்டத்துக்கு 369 ஓட்டங்கள் எடுத்தது இங்கிலாந்து ஆட்டநேரம் வரை 4 விக்கட்டு நஷ்டத்துக்கு 197 ஓட்டங்கள் எடுத்தது.

**லாட்ஸ் சாதனை**

மேற்கிந்திய கிரிக்கெட் காப்டன் ஸோபர்ஸும் ஹால்போர்டும் இன்று ஒரு சாதனையை நிலைநாட்டிவிட்டனர் என்று தான் சொல்லலாம்! நேற்று (அதாவது இரண்டாவது கிரிக்கெட் டெஸ்டின் நான்காவதுநாள்) ஆட்டநேர இறுதியில் 121 ஓட்டங்கள் எடுத்திருந்த ஸோபர்ஸும் 71 ஓட்டங்கள் எடுத்திருந்த ஹால்போர்டும் இன்று 'ஜோடி' சேர்ந்து ஓட்டங்களை விளாசித்தள்ளிவிட்டனர்! இருவரும் இன்று ஆட்டமிழக்காமல் எண்பத்தியொரு ஓட்டங்கள் எடுத்து தங்கள் கோஷ்டியின் இரண்டாவது இன்னிங்ஸை நிறுத்திக்கொண்டனர், விளையாட்டை இவர்கள் நிறுத்திய பொழுது ஸோபர்ஸ் 163 ஓட்டங்களும் ஹால்போர்ட் 105 ஓட்டங்களும் எடுத்திருந்தனர். ஒரு கோஷ்டியைச் சேர்ந்த ''ஜோடி'' வீரர்கள் இவ்வளவு கூடுதலாக லாட்ஸ் கிரிக்கெட் டெஸ்டில்ஓட்டங்கள் எடுத்தது பதினைந்து வருடங்களுக்குப் பின்னர் இப்போழுது நிகழ்ந்திருக்கிறது. 1950-ம் ஆண்டில் லாட்ஸில் நடைபெற்ற ஒரு கிரிக்கெட் டெஸ்டில் வோட்காட் என்பவரும் ஜெனி கோமர்ஸும் ஜோடி சேர்ந்து நூற்றுக்குக் கூடுதலான ஓட்டங்கள் எடுத்திருந்தனர். இதற்குப் பின்னர் லாட்ஸின் இந்தச் சாதனையை இன்று ஸோபர்ஸும் ஹால்போர்டும்தான் வெற்றிகரமாக முறியடித்திருக்கின்றனர்.

**இங்கிலாந்தின் பகீரதப் பிரயத்தனம்**

இன்று தொடர்ந்து விளையாடிய மேற்கிந்தியவீரர்கள் ஸோபர்ஸையும் ஹால்போர்டையும் ஆட்டமிழக்கச்செய்வதில் இங்கிலாந்து பந்தெறி வீரர்கள் பெருமுயற்சியெடுத்தபோதிலும் அவைதோல்வியிலேயே முடிவடைந்தன. இவர்களிருவரும் தாங்களாகவே ஆட்டத்தை நிறுத்தும்வரை இங்கிலாந்து வீரர்களினல் எதுவுமே செய்யமுடியாதுபோய் விட்டது. மேற்கிந்திய கிரிக்கெட் வீரர் ஹால்போர்ட் இன்று 105 ஓட்டங்கள் எடுத்ததின்மூலம் கிரிக்கெட் டெஸ்டில் தமது முதல் சாதனையை நிலைநாட்டிவிட்டார்.

**இங்கிலாந்தின் 2 வது இனிங்ஸ**

இன்று நண்பகல் இடைவேளைக்கு சுமார் இருபது நிமிடங்களுக்கு முன்னர் மேற்கிந்தியா தனது இரண்டாம் இனிங்ஸை (5: 369) நிறுத்திக்கொண்டதும், இங்கிலாந்து தனது இரண்டாவது இனிங்ஸை ஆரம்பித்தது. முதலில் போய்கொட்டும் மில்பேர்னும் விளையாடத் தொடங்கினர். நண்பகல் இடைவேளையின்போது இங்கிலாந்து கோஷ்டி விக்கட் எதுவும் இழக்காமல் 12 ஓட்டங்கள் எடுத்திருந்தது.

**இக்கட்டான நிலை**

இங்கிலாந்து கோஷ்டி இந்த டெஸ்டில் வெற்றி பெறுவதென்ருல் மணிக்கு 71 ஓட்டங்கள் வீதம் எடுக்க வேண்டும். ஆனல்இது நடைபெறமுடியாததொன்ருகும். இங்கிலாந்துக்கு இன்று ஒரு இக்கட்டான நாளாகவே இருந்தது.

**பாதகமான நிலைமை**

நண்பகல் இடைவேளைக்குப்பின்னர் போட்டி ஆரம்பமானதும் இங்கிலாந்து வீரர்கள் அடுக்கடுக்காக 'விழத்தொடங்கிவிட்டனர்.

---

# சிங்களத் திணிப்பு பகையை வளர்க்கும் கட்டாய பாடமாக்குவது நியாயமில்லை

## செனட்டில் நீதிமந்திரி

கொழும்பு செவ்வாய்

"சிங்கள மொழியை படிக்கும்படி தமிழ் மக்களைக் கட்டாயப்படுத்துவதானல் அதனல் ஆழ்ந்த பகைமையும் கசப்புமனப்பான்மையும்தான் உருவாகும்" என்று நீதிமந்திரியும். செனட்சபையின் தற்காலிக அரசாங்கக்கட்சித் தலைவருமான திரு. ஏ. எப். விஜயமான இன்று கூறினர்.

நாடு பூராவிலுமுள்ள பாடசாலைகள் எல்லாவற்றிலும் சிங்களத்தைக் கட்டாயபாடமாக்கவேண்டும் என்று எதிர்க்கட்சியினர் செனட்சபையில் சமர்ப்பித்துள்ள பிரேரணையின்மீது அரசாங்கத்தின் சார்பில் நீதிமந்திரி பேசினர். இந்தப் பிரேரணையின்மீது நடைபெற்ற வாக்கெடுப்பில் பாதகமாக 13 பேரும் சாதகமாக 6 பேரும் வாக்களித்து பிரேரணை தோல்வியுற்றது. ஒருவர் வாக்களிப்பில் கலந்து கொள்ளவில்லை.

நீதிமந்திரி திரு. விஜயமான தொடர்ந்து பேசுகையில், தமிழர்கள் திறமைமிக்கவர்களாகவும் எதையும் நடைமுறையில் சாதிப்பவர்களாகவும் இருக்கிறர்கள். எனவே தமிழ்பிள்ளைகள் சிங்களத்தைப் படிக்க மறுத்துவிட்டாலும் அவர்களின் தாய்மார்கள் அவர்களைப்படிக்கும்படி செய்துவிடுவார்கள். ஏனென்ருல் சிங்களம் நாட்டின் உத்தியோக மொழியாக இருப்பதால் உத்தியோகம் பெறுவதற்கு அவர்கள் படிப்பார்கள். ஆனல் பலவந்தமாக அவர்களைச் சிங்களம் படிக்கும்படி செய்யமுடியாது என்று கூறினர்.

நீதிமந்திரி மேலும் பேசியபோது, எதிர்க்கட்சியினர் அரசாங்கம் நடத்தியபோது ஏன் சிங்களத்தை கட்டாய பாடமாக்கவில்லை என்று கேட்டார்.

இந்தப் பிரேரணை நல்ல நோக்கத்தோடு தயாரிக்கப் படவில்லையென்றும் தீய நோக்கத்துடன் கொண்டுவரப்பட்டிருக்கிறது என்றும் அவர் குறிப்பிட்டார்.

ஆங்கிலம் போதனமொழியாகவிருப்பது நீக்கப்படும், ஆனல் உலகமொழியென்ற வகையில் அதை நாம் அங்கீகரிக்கவேண்டும். என்று கூறியமந்திரி வடக்கு, கிழக்கிலுள்ள மீன்பிடியாளர்களையும், விவசாயிகளையும் சிங்களத்தைக் கட்டாயமாகப் படியுங்கள் என்று வற்புறுத்துவது நியாயமில்லை யென்ருர்.

---


### தேவை

மைன்டேர்ஸ்

பிளேட்டின் மெஷினில் (Platin machine) வேலைசெய்வதற்கு அனுபவமுள்ளவர்கள் தேவை. அனுபவத்திற்கேற்ற சம்பளம் கொடுக்கப்படும். சேமலாபநிதி உண்டு. விண்ணப்பிக்கவும்: 30, பெரியதெரு, யாழ்ப்பாணம் 581

அதிகாரி:

யாழ்ப்பாணத்திலுள்ள எங்கள் நெசவுசாலைக்கு நல்ல அனுபவமும் நெசவுசாலையின் முழுப் பொறுப்பையும் ஏற்று நல்லமுறையில் நடத்தக்கூடிய தராதரமுடைய ஓர் ஆசிரியை தேவை. மனுக்கள் ஏற்றுக்கொள்ளப்படுமிடம்:- ஆ. ச. சங்கரப்பிள்ளை & பிரதர், 166 ஆஸ்பத்திரிவீதி, யாழ்ப்பாணம். 589


### எது வாழ்வு?

(6-ம் பக்கத் தொடர்ச்சி)

டர். மானம் சந்தியிலே கௌரவம்.. .? என்று கூறி மண்டையிலே அடித்துக் கொண்டாள். கௌரியும் அவள் அம்மா பங்கஜமும் ஒருவரை யொருவர் நோக்கினர், பங்கஜத்தின் முகத்தில் தோல்வி தென்பட்டது.

எது வாழ்வு?

படித்துப் பட்டம் பெற்று ஏழைகளை ஏளனம் செய்யும் யுவதிகளே கூறுங்கள் விடையை.


### விற்பனையாளர் தேவை

வந்தாறுமூலை,
ஏறுவூர்,
காத்தான்குடி,
ஆரைப்பற்றை,
கல்லாறு,
களுதாவளை,
நீலாவணை,
சம்மாந்துறை,
அக்கரைப்பற்று,
நிந்தாவூர்,
பொத்துவில்.

ஆகிய இடங்களில் 'ஈழநாடு' பத்திரிகை விற்பனை செய்வதற்கு ஏஜன்டுகள் தேவை.

மனுச்செய்யவும்;
விநியோக மனேஜர்,
ஈழநாடு,
த.பெ. எண் 49,
யாழ்ப்பாணம். 620

நல்லூர் சிவன் கோவில்

## ஆனி உத்தர தெரிசனம்

பராபவ வருடம் ஆனி மாதம் 11-ந் திகதி (25—6—66) சனிக்கிழமை அதிகாலை 3-00 மணியளவில் ஸ்ரீ சிவகாமி அம்பாள் சமேத ஸ்ரீ நடராசமூர்த்திக்கு 108 சங்காபிஷேகமும், காலை 5-30 மணியளவில் தெரிசனமும், காலை 6-00 மணியளவில் உற்சவமும் நடைபெறும்.

இங்ஙனம்
611 நல்லூர் சிவன்கோவில் தேவஸ்தானம்


இப் பத்திரிகை ஈழநாடு லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் சிவன்கோவில் மேலை வீதி. 63-ம் இல்லத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 1966-ம் ஆண்டு ஜூன் மாதம் 23-ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org